www.padippakam.com

# வெகுஜனம்



கொலையால் மௌனிக்கப்பட்ட---

றிச்சார்ட் டி சொய்ஸா

அரக்கத்தனம் கொண்ட
அராஜகத்தின்
அட்டகாசங்களை
அதிகாரத்தைக்கொண்டு
அரசோச்சிவரும்
அநியாயக்காரர்களினால்
அரசியல் அனாதைகளாகிப்போன
அப்பாவிப் பொதுமக்களை
அரவணைக்க முன்வரும்
அப்புள்ளிகள்
அறுவடை செய்யப்படுவது
அரசியல் வரலாற்றில் ஒன்றும் புதிதல்ல.

ஜனம்-2 மார்ச்-ஏப்பிரல் 1990 குரல்-6

படிப்பகம்

www.padippakam.com



# குறிஞ்சிக் குறைகள்

பழ - கருப்பையா

இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு மலையக வருமானம்தான் என்று மார்தட்டிக் கொள்பவர்கள் அந்த வருமானத்தைப் பெற்றுத் தர உரமாக உழைக்கும் மலையகத் தொழிலாளர்களின் பொருளாதாரத்தை வறுமைக் கோட்டுக்குக் கீழ் தங்க வைத்து நவீனகால அடிமைகளாக வேடிக்கை காட்டிக்கொண்டிருக்கிறது முதலாளித்துவ அரசு. இத்தொழிலாளர்களின் சந்தாப்பணத்தை ஏப்பம் விட்டு அரசுக்கு ஊதுகுழலாகப் பயன்பட்டு கோடாரிக்காம்புகளாய் தொழிற்சங்கம் என்னும் பெயரில் தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சும் தோட்டத்து அட்டைகளாக காலத்தை ஓட்டிக்கொண்டு பிறந்த நாள் விழாக்களும் பாராட்டு விழாக்களும், புத்தக வெளியீடுகளுமாய் தொழிலாளர்களின் வறுமையிலும், அறியாமையிலும் குளிர் காய்கிறது ஒரு கூட்டம். கணவனும் மனைவியும் மாடாய் உழைத்துமே அரைவயிறை நிரப்பமுடியாத ஏக்கத்தினால் பள்ளிக்குப்போகவேண்டிய பிஞ்சு உள்ளங்களையும் தோட்டத்திற்கு அழைத்துச் செல்வதன் மூலம் கல்வி அறிவின்றி வெளி உலகம் தெரியாமல் தலைவர்கள் காட்டுவதே உலகம் என்று ஒன்றரை நூற்றாண்டு காலம் வாழ்ந்து கொண்டிருக்கிறது உழைக்கும் வர்க்கம்.

இந்நிலட்சணத்தில் தோட்டங்கள்தோறும் மகளிர் தினம் கொண்டாடி போட்டோபிடித்து பத்திரிகையில் போடுவித்து தங்களை விளம்பரப்படுத்தி உழைக்கும் பெண்களையே ஏளனம் செய்கிறார்கள் மலையக மக்களின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் தாங்களே என்று கூறுபவர்கள்.

உழைக்கும் மக்களின் விடுதலையின் ஒரு அங்கமே பெண்விடுதலை. பெண்விடுதலைக்கான உண்மையான உரிமைக்குரல் உழைக்கும் பெண்களான மலையகப் பெண்களிடமிருந்து கிளம்பிப் பரவியே பெண்விடுதலையை இலங்கைத்தீவில் வென்றெடுக்க முடியும். பெண்விடுதலைக்கான உரிமைக்குரல் மலையகத்திலிருந்து எழுவதற்கு மலையகப் பெண்கள் சிறந்த கல்வி அறிவு பெறவேண்டும். அவர்கள் கல்வி அறிவு பெறவேண்டுமாயின் அவர்களின் பொருளாதாரம் நிரப்பப்படும்போதுதான் மலையகப் பெண்கள் பாடசாலை செல்லமுடியும். இதற்கு விடிவு எப்போது?

படிப்பகம்

# எமது எண்ணங்கள்

பெரும் புயல் ஒன்று ஏற்படுவதற்கு முன் இருக்கக்கூடிய பயங்கர மௌனம் போன்ற நிலை அமைதி என்ற சொல்லை போர்த்திக்கொண்டு வடக்குக்கிழக்கில் உலாவருகிறது. மக்களுக்கு அமைதியும் சமாதானமும் ஏற்படவேண்டும் ஜனநாயகச்சூழல் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற சூழ்நிலை இருவருடங்களுக்கு முன்பு ஏற்படுத்தப்படுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோது விடுதலைப் புலிகள் அனைத்தையும் குழப்பியடித்தனர். கட்சிகள் பிரச்சாரக் கூட்டங்களை ஆயுதம் மூலம் பயமுறுத்தினர். சிவில் நிர்வாகம் வழமைக்கு, பாடசாலைகள், கடைகள், படமாளிகைகள் திறக்க அனுமதி மறுக்கப்பட்டன. இவர்களின் இத்தனை தடைகளையும், அரசாங்கத்தின் அசமந்தப் போக்கையும் மீறி தமிழ் பேசும் மக்களுக்கான சகஜ நிலைக்காக மாகாண அரசு என்னும் அரசியல் வடிவம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவ் அரசியல் வடிவத்தை கேலிக்கூத்து என்றும் பித்தலாட்டம் என்றும் வர்ணித்தவர்கள் இன்று மாகாண அரசை விட்டால் வேறு வழி இல்லை என்னும் நிலையில் அதைக்கட்டி அழுது கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து அரசியல் வடிவம் ஒன்றை ஏற்படுத்தியவர்களும் இன்று அதைக் கட்டி அழுபவர்களுக்குமிடையிலான அரசியல் தூரத்தையும் யார் தமிழ் பேசும் மக்களுக்கு தலைமை தாங்கக் கூடியவர்கள் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது. தவிர அன்று தமிழ் பேசும் மக்களுக்கு வழமை நிலை கிடைப்பதை விட தமது பதவியே பெரிதென நினைத்து, தம்மைவிட வேறுயாரும் தமிழ் பேசும் மக்களை ஆளக்கூடாது என்ற எண்ணத்தில் கடைகளை, பாடசாலைகளை, அலுவலகங்களை மூடுமாறு பயமுறுத்தினர். யாராவது ஜனநாயகத்துக்கு திரும்பியவர்கள் தமது கருத்துக்களை மக்களிடம் சொல்லமுன்வந்தால் துரோகிகள் என்று மரணதண்டனை விதித்தனர். ஆனால் இன்று விடுதலைப் புலிகள் கட்சிக் கூட்டங்கள் வைக்கின்றனர். கடைகள், பாடசாலைகள், அலுவலகங்கள் போன்றவைகளைத் திறக்க அனுமதிக்கின்றனர். ஏனைய இயக்கங்கள் இவர்களுக்கெதிராக மாற்று நடவடிக்கைகள் எடுக்காது மக்கள் நன்மை கருதி அனுமதித்திருப்பதை ஆயுதவாதத்தில் பலவீனம் என்று கருதாது பார்ப்பின் சற்று ஆறுதலாகவுள்ளது.

மாகாண அரசுக்கு அதிகாரங்களைக் கொடுக்க மறுக்கிறது மத்திய அரசு. இது பற்றி இதுவரை மாகாண அரசு கலைக்கப்படவேண்டுமென்று குத்துக்கரணம் அடித்தவர்கள் அது கலைக்கப்பட்ட பின்பும் யாரும் மூச்சுவிடக்காணோம் ஏன்? இன்றைய தேவை மாகாண அரசை கலைத்துவிடுவதல்ல மாகாண அரசுக்கான முழுமையான அதிகாரத்துக்காக போராடுவதைப் புரிந்துகொள்ளாது நடந்து கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் அனர்த்தங்களுக்கு இவர்களே பொறுப்பேற்க வேண்டிவரும்.

வட-கிழக்கு மாகாண அரசு கலைக்கப்படுவதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் இதுவரை இடமில்லை. தாமாக கலையவோ அல்லது முதல்வர் கலைக்கும்படி கோரவோதான் வழி இருந்தது. இது வரை மத்திய அரசு அலட்டிக்கொள்ளவில்லை. இப்போது தாம் ஆளவேண்டும் என்னும் சுயநல நோக்கில் மாகாண அரசு கலைக்கப் படவேண்டும் என்று கூக்குரல் இட்டவர்களும் ஒத்து ஊதியவர்களும் தென்னிலங்கை பேரினவாத சக்திகளுக்கு வழிவகுத்து கொடுத்துள்ளனர். இப்போது மாகாண சபையைக் கலைக்க ஜனாதிபதிக்கு விசேட அதிகாரம் வழங்குவதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் 154எல் சரத்தின் பிரிவின் கீழ் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. இதை வழிகோலியவர்களுக்கே எதிர்காலத்தில் ஆபத்தாக முடியும்.

பத்திரிகையாளரும், மனித உரிமைகளுக்கு குரல் கொடுத்து அரசின் அட்டூழியங்களை பாசிச நாடகங்களை அம்பலப்படுத்தியவருமான திரு-றிச்சாட் டீ சொய்சா அரசின் உதவியுடன் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவரது படுகொலை கருத்து சுதந்திரத்திற்கு மனித நேயத்திற்கு மீண்டும் இலங்கைத்தீவில் விழுந்துள்ள மரண அடியாகும். ஒரு தனிமனிதனின் குரல்வளையை நெரிப்பதன் மூலம் தமது கபட நாடகங்களின் அனைத்தையும் மூடிமறைத்துவிட முடியும் என பாசிசக் கூட்டாளிகள் கனவு காண்பதன் மூலம் தமது சவக்குழிகளை தாமே தோண்டத்தொடங்கிவிட்டனர்.

சர்வதேச மகளிர் தினம் வருட வருடம் பங்குனியில் வந்து போகிறது இலங்கையில் மத்திய தர வர்க்கப் பெண்களின் பொழுது போக்கு மாதர் சங்கங்கள் பெண்விடுதலை என்னும் சொல்லைப் பாவித்து கூட்டங்கள் நடாத்துவது கட்டுரைகள் வெளிவருவது என்பன வழமைபோல் தொடர்கின்றன. உழைக்கும் பெண்கள் மத்தியிலிருந்து உறுதியான அமைப்புக்கள் பெண் விடுதலைக்காய் கட்டி எழுப்பப்படுவதே பெண் விடுதலைக்கு சரியான பாதையை செப்பனிட முடியும். அதற்கான நடவடிக்கைகளை உழைக்கும் மக்களின்பால் அக்கறையுள்ள முற்போக்கு சக்திகளால்தான் முன்னெடுக்க முடியும். முற்போக்கு சக்திகளை இலங்கைத்தீவு முழுவதும் பாசிச மிருகங்கள் பங்கு போட்டுக்கொண்டு இரத்தம் குடிக்கின்றவரும் இவ் வேளையில் பெண்களின் நிலை நினைப்பதற்கு வேதனையானதே.

www.padippakam.com

# அணு உலையாய் நடமாடுகின்றாய்

கவிதை

வேற்படை
ESSEN

"புலியிருந்த குகை" என்ற புகழாரம்
பரமசிவனால் பாதி ஆக்கப்பட்ட கதையோ
அவதாரம்.
ஒன்றும் ஒன்றும் இரண்டு
என் கணிதத்தில் பெண்ணே
உன் கணிதத்தில் ஒன்று+ஒன்று
ஒன்றுதான்.
சைவசித்தாந்த தத்துவ வித்தகர் கூற்று
இதை அறி.
உன் ஆற்றலைப் பாடிய புலவர்கள்
"ஆலகால விசத்தையும் நம்பலாம்
ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம்"
ஆனால்———உன்னை நம்பினால்—— என்ன?
அந்த உண்மையை நீ
அறியாமல் அடக்கி ஒடுக்கி
மடக்கி வைத்ததால்—————
அடி முதல் முடிவரை அனல் கனல்
பறியா எரிநெருப்பாம்——
நடமாடுகின்றும் அணு உலையாம்.
அணுவின் வலிமையும், ஆக்கமும்
அணு உலைக்கசிவின் அனர்த்தமும்
அறிந்தவள்
நேற்றைய பிழைகளும் இன்றைய தவறுகளும்
நாளையின் தேவையால் விழுங்கப்படுகையில்———
உழைப்பாளிகளுடனே உன் கரங்களும்
இணைந்திட வேண்டும்—விழிப்பாயிரு
மலரும் உலகியல், உனது விழிப்பால்
மகளே நீயும் உலகில் ஓர் அங்கம்
என்?
புதரில் கிடக்கும் புழுவாய்த்
துடிக்கிறாய்!



படிப்பகம

www.padippakam.com

# நெல்சன் மண்டேலாவும் தென்னாபிரிக்க மக்களும்

A. நேச

இன்று உலகின் மூலை முடுக்கெல்லாம் நெல்சன் மண்டேலாவின் விடு தொடர்பான செய்திகள் வெளிவருவதும் மக்கள் மகிழ்ச்சி வெள்ள ஆரவாரம் செய்வதும் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொ ப்பட வேண்டியவை. தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலைக்க கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக சிறையில் வாடியபோதிலும், சொந்த விடுதலைக்காக இன ஒதுக்கல் வெள்ளை சிறுபான்மை ஆ



யாளர்களுடன் என்றுமே பேர பேச விரும்பாத தோழர்-நெ ல் மண்டேலா கடந்த 11.2. இல் விடுதலை செய்யப்பட்டுள் மனித நாகரிகமே கா[illegible]ழு வகையில் தமது சொந்த மண் யே சிறுபான்மை இன ஒதுக்கல் வெள்ளையர்களின் ஆட்சியினால் மைகள் எதுவுமற்ற அடிமைகளா முற்பட்ட துயரமான கதைக்கு வுரை எழுத உதயமான போர டத்துக்கு அரசியல், இனுவரீதிய செயற்திட்டங்களை ஸ்தாபித்தவ ருள் மண்டேலா மிகவும் முக்கிய னவர். மாணவப் பருவத்திலிருந் பிற்போக்குவாத வெள்ளையரின் இன ஒதுக்கல் கொள்கைகளுக்கு எதிராக போராட ஆரம்பித்த ம டேலா 1940இல் போர்ட் கரே கறுப்பின பல்கலைக்கழகத்தில் வர் தம்போ(தற்போது வெளிநாட்டில் டில் இயங்கிக்கொண்டிருக்கும் ஆபிரிக்க

தேசிய காங்கிரசின் தலைவர்) போன்றோருடன் இணைந்து வெள்ளை இனவெறி அரசுக்கெதிரான மாணவர் களின் போராட்டத்திற்கு தலைமை தாங்கியதுடன் அவருடைய அரச எதி ர்ப்புப் போராட்டம் உதயமாகியது. மண்டேலாவும் ஒலிவர் தம்போ, வா ல்ட்டர் சிசிலு(இவர் மண்டேலாவுடன் ஆயுட்சிறைத் தண்டனை அனுபவித்து கடந்த வருடம் விடுதலை செய்ய



[illegible] உறுப்பினர் வால்ட்டர் சிசிலுவுடன் மண்டேல



படிப்பகம்

www.padippakam.com

பட்டவர்களுள் ஒருவர்) போன்றவர்கள் இணைந்து ஆபிரிக்க தேசிய காங்கிரசின் ( ANC ) இளைஞர் பிரிவை ஸ்தாபித்தனர். 1950இல் இளைஞர் பிரிவின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட மண்டேலா தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கைகளையும் ஆட்சியாளர்களையும் எதிர்த்துப் போராடுவதற்கு அணிதிரட்டுவதற்கான வேலைத்திட்டத்தை உருவாக்குவதுடன் நின்றுவிடாது கறுப்பின பெரும்பான்மை மக்களின் போராட்ட உணர்வுகள் குணாம்சரீதியாக குறுகிய இனவாதத் தன்மைகொண்டதாக மாற்றமடையக்கூடாது என்பதற்காகவும் போராடினார். இனவிரோதத் தன்மையற்ற ஜனநாயக சமுதாயத்தை நிர்மாணிப்பதையும் அதில் சோஷலிச அடிப்படையிலான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அழைப்பு விடுத்த விடுதலைச் சாசனத்துக்கு ஆதரவளித்தமைக்காக மண்டேலாவுடன் சேர்ந்து ஏனைய இனத்தைச் சேர்ந்த 155 பேருக்கு தேசத் துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு 1956இல் கைது செய்யப்பட்டார்கள். இச் சம்பவங்களைத் தொடர்ந்து 1960இல் தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் ஆட்சியாளர்களினால் ANC மீது தடைவிதிக்கப்பட்டது. தேசத் துரோக குற்றச்சாட்டுக்கள் மீதான வழக்குகள் தோல்வியைத் தழுவியதைத் தொடர்ந்து 1961இல் அனைவரும் விடுதலை செய்யப்பட்டன



தென்னாபிரிக்க மக்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை இன ஒதுக்கல் நிறவெறி வெள்ளையர்களின் ஆயுத காவல்படையினர் அடக்கும் ஒரு காட்சி.

ர் இச் சம்பவத்தைத் தொடர்ந்து ANC இன் முன்னணி உறுப்பினர்கள் தலைமறைவு அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தனர். இன ஒதுக்கல் ஆட்சியாளர்களின் அரசுக்கெதிராக இவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2 நாள் வேலை நிறுத்தம் இன ஒதுக்கல் அரசின் ஆயுதப்படைகளினால் நசுக்கப்பட்டதைத் தொடர்ந்து ANC ஆனது தனக்கு ஒரு ஆயுதப் பிரிவை உருவாக்குவதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தது. "உம் கோன்டா வீ சிஸ்வே" என்ற பெயரில் ஆயுதப்பிரிவு இயங்க

தொடங்கியது. அதன் முதல் தளபதியாக மண்டேலா நியமிக்கப்பட்டதுடன் ANC யின் போராட்டத் திட்டங்களையும், கொள்கைகளையும் தங்களுடைய நேச சக்தி ஆபிரிக்க நாடுகள் பலவற்றுக்கு விளக்கி போராட்டத்தை சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்வதற்கான நோக்கத்துடன் விஜயத்தை மேற்கொண்டார். அந்நாடுகளில் ANC இன் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி பெறுவதற்குமான




மண்டேலாவின் விடுதலையை [illegible] தென்னாபிரிக்க இளைஞர்களும் சிறுமிகளும் குதூகலிப்புடன் வீதியில் செல்லும் காட்சி.

ஏற்பாடுகளைச் செய்தார். தாயகம் திரும்பி கட்சியின் வேலைத்திட்டங்களை மேலும் விரிவு படுத்தி போராட்டத்தை முன்னெடுக்க முனைந்த வேளையில் 1962 இல் இன ஒதுக்கல் ஆட்சியாளர்களின் ஆயுதப் படையினர் மண்டேலா உட்பட மற்றும் பல முன்னணி உறுப்பினர்களை கைது செய்தனர். இவர்கள் மீது வேலை நிறுத்தத்திற்கு கறுப்பின மக்களை அணிதிரட்டியமைக்காகவும் சட்டவிரோதமாக ஏனைய நாடுகளுக்கு விஜயம் செய்ததற்காகவும் குற்றம் சுமத்தி 5 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து சிறைச் சாலைக்குள் அடைத்துவிட்டனர். இவ் வேளையில் [illegible]சமாக ANC இன் தலைமறைவாக இயங்கி வந்த தலைமையகம் இன ஒதுக்கல் அரசின் கூலிப்படைகளினால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து மண்டேலாவின் கைப்பட எழுதப்பட்டிருந்த தஸ்தாவேஜுக்களை கைப்பற்றிய இன வெறி ஆட்சியாளர்கள் அரசாங்கத்தை கவிழ்க்க சதிசெய்ததாக ANC ன் முன்னணி உறுப்பினர்களான மண்டேலா, வால்ட்டர் சிசிலு, கோவான் எம்பெகி ஆகியோர் உட்பட எழுபேர் மீது [illegible] பிரிட்டோரியா உயர் நீதிமன்ற



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

த்தில் வழக்கு தொடரப்பட்டது. இறுதியில் இவர்கள் அனைவருக்கும் 1964 ஜூன் 12இல் ஆயுட்கால கடூழிய சிறைத் தண்டனை விதித்தது. அந் நீதிமன்றத்தில் மண்டேலா அவர்கள் ஆற்றிய உரையே தென்னாபிரிக்க மக்களின் விடுதலையின் செழிப்புக்கு மேலும் வித்திட்டது. "இன ஒதுக்கல் வன்முறை ஆட்சிக்கு எதிராக வன்முறை ரீதியாக போராடுவதைத்தவிர ANC க்கு வேறுமார்க்கமே இல்லை" என்று கூறியதுடன் எனக்கு வன்முறையில் காதலில்லை வெள்ளையர் ஆதிக்கத்துக்கெதிராக நான் போராடியிருக்கிறேன் அதேபோல் கறுப்பரின் ஆதிக்கத்துக்கெதிராகவும் போராடியிருக்கிறேன். சகலரும் சம வாய்ப்புடனும், அமைதியுடனும் வாழக்கூடிய சுதந்திரமான ஜனநாயக சமுதாயமொன்றை உருவாக்குவதற்கான இலட்சியங்களை நான் கொண்டிருக்கின்றேன். இந்த இலட்சியங்களுக்காக பாடுபடவும், வாழவும் நான் விரும்புகின்றேன். அவசியமாயின் இந்த இலட்சியங்களுக்காக மரணத்தைத் தழுவவும் விரும்புகின்றேன். என்று மண்டேலா கூறியதின் மூலம் தனது போரா





தென்னாபிரிக்காவின் தலைநகரில் மண்டேலாவின் விடுதலையை அறிந்த மக்கள் கூடியிருந்து தங்கள் சந்தோசத்தை தெரிவிக்கும் ஒரு காட்சி.

ட்டக் குணாம்சத்தை வெளியுலகிற்கு தெரியப்படுத்தினார். மண்டேலாவும் அவரது தோழர்களும் கடந்த 25 வருடங்களாக வெளியுலகமே தெரியாது தென்னாபிரிக்க விடுதலையின் எதிர்கால கனவுகளையும், கற்பனைகளையும் சுமந்துகொண்டு ஏற்பட்ட சித்திரவதைகளையும் தாங்கிக்கொண்டார்கள். அதிலும் முன்னைய 18 வருட சிறைவாழ்க்கை மிகவும் கொடூரமானவை. ரொபின் ஐலண்ட் சிறைச்சாலையில் மண்டேலா கல்லுடைத்தல் போன்ற மிகவும் கடினமான வேலைகள் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார். தரங்குறைவான உணவுகள் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்பட்டன. வெளியுலக தொடர்புகள் முற்றாக தடைசெய்யப்பட்டதுடன் வாசிப்பதற்கு பத்திரிகை, புத்தகம்போன்றவைகள் தடைசெய்யப்பட்டிருந்தன. அவருடைய மனைவி வின்னி மண்டேலாவுக்கும் பிள்ளைகளுக்கும் பல விதமா

www.padippakam.com

மான தொல்லைகளையும், நெருக்குதல்களையும் இன ஒதுக்கல் ஆட்சியாளர்கள் ஏற்படுத்தத் தவறவில்லை. இவ்வகையாக நாகரீக உலகமே காறி உமிழும் வகையில் அமெரிக்க, பிரித்தானிய மற்றும் மேற்கத்தைய வல்லாதிக்கத்தின் துணையுடன் இன ஒதுக்கல் கொள்கைகளை பெரும்பான்மை கறுப்பின மக்கள் மீது திணித்து தமது சுரண்டலை மேற்கொண்டு வரும் வெள்ளை நிற சிறுபான்மை ஆட்சியாளர்களால் ஒடுக்கப்படும் தென்னாபிரிக்க மக்களின் போராட்டத்திற்கு கிடைத்த சர்வதேச அங்கீகாரமும், அம்மக்கள் சர்வதேச ரீதியாக கொண்டிருக்கும் உறவுகளின் நிர்ப்பந்தங்களும், பொருளாதாரத்தடைகளும் மண்டேலாவுடன் விடுதலை தொடர்பாக பேரம்பேசும் நிலைக்கு நிர்ப்பந்தித்தபோதிலும் ஆட்சியாளர்கள் எதிர்பார்த்த நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்த சலுகைகளையும் நிராகரித்து வந்த மண்டேலாவை எந்தவித நிபந்தனைகளுமின்றி 2 வருட சிறைவாசத்தின் பின்பு அவருடைய 71வது வயதில் விடுதலை செய்தது சற்று ஆறுதலைத்தரக்கூடியதாக இருக்கின்றபோதும் "இன ஒதுக்கல் போராட்டத்தின் முடிவின் ஆரம்பம் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால் எனது விடுதலைப் போராட்டத்தை தளர்த்துவதற்கான தருணம் இது என்று அர்த்தப்படாது" என்று கூறியிருக்கும் மண்டேலாவின் கருத்துக்கள் ஒடுக்கப்பட்ட தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் ஒர் உண்மையானதும் முழுமையானதுமான விடுதலையை குறித்து நிற்கின்றது. ஆனால் மண்டேலாவை விடுதலை செய்ததை எதிர்ப்பு தெரிவித்த தென்னாபிரிக்காவின் தலைநகரங்களில் இன ஒதுக்கல் பாசிச, நாசிச சக்திகள் ஆர்ப்பாட்ட எதிர்ப்பு ஊர்வலங்களை




மண்டேலாவின் விடுதலைக்கு எதிர்ப்பு தெரிவித்த தலைநகரில் பாசிச நாசிச நிற நிறவெறி சக்திகள் ஆர்ப்பாட்டங்கள் செய்யும் ஒரு காட்சி

நடத்தியதுடன் ஆங்காங்கே கறுப்பின மக்களுக்கெதிராக வன்முறைகளை மேற்கொண்டார்கள். நிறவாத, இனவாத ஆதிக்க வெறிகொண்டவையும் இப்பாசிச, நாசிச மற்றும் இன ஒதுக்கல் வெள்ளையர்களின் ஆட்சியை தூக்கியெறிந்து சகல இன மக்களும் சமத்துவத்துடனும், சுதந்திரத்துடனும், அமைதியுடனும் வாழ்வதற்கான சூழ்நிலை உருவாகும்வரை அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க முனையும் மண்டேலாக்கள் போன்றவர்களின் போராட்டப் பயணங்கள் ஓய்ந்துபோவதில்லை.


படிப்பகம்

www.padippakam.com

# பெண் இனத்தின் மறுபக்கம்

யோசி
BERLIN

பெண்களை அடிமையாக வைத்திருக்கும் நிலை ஒரு பயங்கரமான கொடுமையாக இன்றும் நம்மத்தியில் நிலவுகிறது. தொழிலாளர் விடுதலையுடன் பார்க்கும்போது பெண்விடுதலை எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. தொழிலாளர் விடுதலை பற்றி சிந்தித்த அறிஞர்களிகூட பெண் விடுதலை பற்றி சிந்திக்கவில்லை என்றே தோன்றுகின்றது. ஏனென்றால் தொழிலாளர் என்பது ஆண்கள் மட்டும் தான் என்றெண்ணினார்கள் போலும். அல்லது பெண்விடுதலையும் அதற்குள் அடங்கும் என்று எண்ணினார்கள்.

தொழிலாளர் விடுதலை அடையும்போது பெண்களும் விடுதலை பெற்றுவிடுவார்கள் என்று அவர்களும் நினைத்தனர். அதனால்தான் தொழிலாளி வர்க்கம் விடுதலை அடைந்த நாடுகளிலுங்கூட பெண்கள் இன்னும் முழுமையாக விடுதலை பெறாமல் இருக்கிறார்கள். ஆணாதிக்கம் அங்கும் நிலவுகிறது. இந்த ஆண்கள் தமது சிந்தனையிலிருந்து இன்னும் அந்த உணர்வை நீக்கமுடியாதவர்களாக இருக்கிறார்கள்.

சமூக உற்பத்தியில் பாதிப்பங்கு இருக்கும் பெண்கள் அரசியலில் அந்த நிலைக்கு வரமுடியாமல் இருக்கிறது. அவர்கள் அங்கும் குடும்பம் என்ற கட்டுப்பாட்டுக்குள் கட்டுண்டு கிடப்பது மிகவும் வேதனையாக உள்ளது. முதலாளி, தொழிலாளி, உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்று கூறவில்லையா. அதேபோல் பெண்ணையும் ஆணினவெறியர்கள் தங்கள் பரம்பரை பரம்பரையாக விளக்கிவந்தனர். தொழிலாளரை அடக்கிஆள அரசு எப்படி அதற்கெதிராக அரசயந்திரங்களைப் பயன்படுத்திவந்ததோ அதேபோல் ஆண்களும் பெண்களை அடக்கியாள வன்முறையையும் சாதி, சமயம், குடும்பம், கலை, கலாச்சாரம், இலக்கியம் பண்பாடு என்ற சொற்பதங்களால் அடக்கி ஆண்டு வருகின்றனர்.

உலகில் $\frac{1}{2}$ பகுதிக்குபெண்கள் ஆண்களிலும் பார்க்க கூடுதலாக உழைக்கின்றனர் $\frac{2}{3}$ பங்கு வேலை செய்கின்றனர். ஆனால் அவர்களுக்கு கிடைப்பதோ $\frac{1}{10}$ பங்கு வருமானம் $\frac{1}{100}$ பங்கு சொத்து இவை ஏனென்று சிந்திக்கவில்லையா? இப்படி ஆணாதிக்க சுரண்டல் இருக்கும்வரை சுதந்திரம் ஜனநாயகம், கலாச்சாரம், பண்பாடு என்று கூறுவது எத்தனை பொய் பித்தலாட்டம் ஏமாற்று.



படிப்பகம்

# விசித்திர விவாகரத்து

**சிறுகதை** அக்கினி

பிள்ளைகளுக்கு பாடம் படிப்பிக்கவே ஷோபனாவால் முடியவில்லை. காலையில் அறிந்த செய்தி மனதுக்குள் குடைந்து கொண்டிருந்தது. மணி அடித்ததுமே ஓய்வறையை நோக்கி வேகமாக நடந்தாள். நிஷாந்திக்கு இன்னும் ஒரு பாடம் ஓய்வுண்டு. எனக்கும் ஓய்வு அவளுடன் மனம் விட்டுப்பேசி ஆறுதல் கூறவேண்டும். பாவம் நிஷாந்தி' எப்படியெல்லாம் வேதனைப்படுவாள். அவளின் எதிர்காலமே அனியாயமாகிப் போய்விட்டதே. விவாகரத்தென்றால் ஊரில் நாலுபேர் நாலு மாதிரிக் கதைப்பார்களே என்று சிந்தனையை ஓடவிட்டவாறு ஓய்வறைக் கதவைத் திறந்தாள். நிஷாந்தியைப் பார்த்தபோது ஷோபனாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. நிஷாந்தி எதுவித சலனமுமின்றி செய்திப்பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தாள்.

என்ன ஷோபனா இந்தப்பாடம் "பிறி" யா? எனக்கும்தான், என்றாள் புன்சிரிப்புடன் நிஷாந்தி.

"ஐ ஆம் சொறி" நிஷாந்தி, உனக்கு இப்படி நடக்குமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. உன் அவரா இப்படி. என்னால் நம்பமுடியவில்லை. ஷோபானாவுக்கு அழுகை விக்கியது.

ஏய் ஷோபனா என்ன குழந்தைப் பிள்ளை மாதிரி. நானே சந்தோஷமாய் இருக்கிறன். உனக்கொன்று தெரியுமா?

நான் தான் விவாகரத்து செய்துள்ளேன்.

ஷோபனாவுக்கு AK47 ரவை ஒன்று துளைத்தது போல் இருக்கின்றது. நீ என்ன சொல்கிறாய் நிஷாந்தி.

நிதானமாக எதுவுமே நடக்காதவள் போல் பிளாஸ்க்கிலிருந்து இரு கோப்பைகளில் தேநீரை ஊற்றிக் கொண்டிருந்தாள் நிஷாந்தி. வெளியே" பிசிக்ஸ் லாப்"புக்கு போகும் மாணவர்கள் கதைத்துக்கொண்டு சென்றது ஒரே சத்தமாக இருந்து கொஞ்சகொஞ்சமாக குறைந்துபோய் அமைதியாகியது.

இரண்டாம் வகுப்பு பிள்ளைகளும் அம்பிகா ரீச்சரும் இரண்டாம் வாய்ப்பாட்டை தூரத்திலுள்ள வேப்பமரத்துக்கு கீழே நின்று உரக்கச் சொல்லிக்கொண்டிருந்தது மெல்லிய ராகமாக காற்றில் மிதந்து கொண்டிருந்தது.

ஓய்வறையில் நிஷாந்தியையும் ஷோபானாவையும் விட மற்றைய ஆசிரியர்கள் எல்லோரும் வகுப்புகளுக்கு போயிருந்தனர்.

ஷோபனா உனக்கு இதைக் கேட்கும்போது ஆச்சரியமாய் இருக்கும். ஆனால் நான் உனக்கு என்னைப் பற்றிய விடயங்களை இதுவரை சொல்லியதில்லை. இப்போது சொல்லவேண்டும் போலுள்ளது.

நான் ஆதூஷனை சந்தித்தது ஒரு தற்செயல் நிகழ்ச்சசி தான். அப்போது நான் ஆசிரியையாகி பத்து மாதங்களிருக்குமென நினைக்கிறேன். ஒரு ஞாயிற்றுக்கிழமை எங்கள் பாடசாலையில் "பெண்களும் சமூகப்பிரச்சனைகளும்" என்னும் தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடந்தது. அப்போதெல்லாம் நான் கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்த சராசரிப் பெண்தான். ஆனால் பெண்கள் மீது சில சுமைகள் வலுகட்டாயமாகச் சுமத்தப்படுகின்றன என்பது எனக்கு விளங்கியும் விளங்காலுமான அரைகுறை விளக்கமாக இருந்தது. இந்தச் சுமைகள் என்ன இதை யார் சுமத்துகிறார்கள், இவற்றை வழிவந்த மரபாக ஏற்றுக்கொண்டு கண்மூடிக் கொண்டு வாழ்வதா அல்லது இவற்றுக்கு எதிராக போராடுவதா. போராடுவதாயின் எப்படிப் போராடுவது.

அதுசரியானதா. அப்படியாயின் இதுவரை அநேகமானவர்கள் இவற்றை எதிர்த்து ஏன் போராடவரவில்லை. அப்படியாயின் அவை சரியாக இருக்குமா அல்லது எல்லோரும் நமக்கேன் வீண்வம்பு என்று இருக்கிறார்களா. அல்லது எம்மீது சுமைகளை ஏற்றி அடிமைகளாக்கி வைத்திருப்பவர்களை கண்டு இவர்கள் பயப்படுகிறார்களா?

இப்படியாக ஒன்றுக்கொன்று முரணான கேள்விகளுக்குப் பதில்களுமாக நான் குழம்பிப்போயிருந்தேன். எனக்குள் ஒரு போராட்டம், ஆனால் அது எனக்கே விளங்கவில்லை. இப்படியான சூழ்நிலையில்தான் நான் இந்தக் கருத்தரங்குக்கு போனேன்.

அங்கே பலவிடயங்கள் பேசப்பட்டன. சாதிப்பிரச்சனை, கலாசாரத்தில் பெண்கள், குடும்பத்தில் பெண்கள், சீதனச்சந்தையில் பெண்கள் இப்படிப் பல.

சில எனது கேள்விகளுக்குப் பதில் கிடைத்தது. சில புதிய கேள்விகள் முளைத்துக்கொண்டன. முன்பு இலகுவாகக் குழம்பிப் போயிருந்த நான் சிறிதளவு தெளிவுகளுடன் சற்றுகனமாகக் குழம்பிப்போனேன்.

அங்கே ஆதூஜனும் பேசினார். அவரின் பேச்சு எல்லோரையும் கவர்ந்தது. அது என்னையும் கவர்ந்ததில் வியப்பில்லை. நகைச்சுவையுடன் பல புதிய பரிமாணங்களை அழகாக கோடிட்டு காட்டினார். சீதனப்பிரச்சனைப் பற்றி பேசும் போது உணர்ச்சிவசப்பட்டார்.

பெண்கள் பிரச்சனைகளில் நமது சமூகத்தை பொறுத்தவரை சீதனம் மிகவும் கொடியது. இது தீர்ந்துவிட்டால் பெண்களுக்கு பிரச்சனை தீர்ந்துவிட்டதாக சிலர் நினைக்கிறார்கள் அது தப்பு. பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சங்கிலியின் ஒரு வளையம் தான் சீதனம். அனைத்து வளையங்களும் உடைக்கப்படும் போது தான் பெண் விடுதலை பெறமுடியும். முதலில் ஆணி

வேரை பிடுங்கவேண்டும்---------

இப்படியாக ஆதூஷன் பேசிக்கொண்டே போனார்.

எனது ஐயப்பாடுகளுக்கு பதில் தரக்கூடிய ஒரே ஆள் ஆதூஷன் என முடிவு செய்தேன்.

அடிக்கடி சந்தித்தோம். பல பிரச்சனைகளை அவருடன் அலசினேன். சில விளங்கவில்லை சற்று கடினமாக இருந்தது. சிலவற்றில் தெளிவானேன். சந்திப்புக்கள் தொடர்ந்தன. இருவர் மனதும் ஒத்துப் போயிற்று . திருமணம் செய்ய முடிவு செய்தோம். அதில் ஒரு சிக்கல் தோன்றியது. ஆதூஷன் சீதனம் வாங்காமாலே, தான் கல்யாணம் செய்வேன் என்றார்.

எனது அப்பாவோ சீதனம் கொடுத்துத் தான் கல்யாணம் செய்து வைப்பேன் என்றார். இவ்வளவு நகை கொடுத்தேன். இவ்வளவு லட்சம் பணம் கொடுத்தேன். வீடுவளவு கொடுத்தேன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை, சமூகக்கௌரவம் இருப்பதாக அப்பா நினைத்தார்.

அம்மாவோ, நீ ஐந்து சதமும் வாங்காமல் போனால், உன்னை மாமியார் என்ன கொண்டு வந்தாய் என்று சொல்லித் திட்டுவார். நிஷாந்தி நீ எங்களுக்கு ஒரே பிள்ளை. எங்கள் சொத்தெல்லாம் உனக்குதானே. அவரிடம் சொல்லு என்று அழுது கொண்டாள்.

சீதனம் கொடுக்கவில்லையென்று குழம்பிப்போகும் கல்யாணங்களின் மத்தியில் சீதனம் வேண்டாம் என்பதற்காக எங்கள் கல்யாணம் குழம்பியது. முடிவில் பெற்றோரின் எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்டு நாமாக பதிவுத்திருமணம் செய்து கொண்டு தனியாகப் போய்விட்டோம்.

தனிக்குடித்தனக் காலத்தில் அவரிடம் இருந்த பெண்விடுதலைப்பற்றிய நிறைய புத்தகங்களைப் படித்தேன். வரலாறுகளின் பெண்களின் சாதனைகள், பல நாடுகளில் பெண்களின் விடுதலைகள். பெண்களின்

உரிமைப்போராட்டங்கள், வீட்டுக்குள் பெண்களின் பங்கு, உழைக்கும் பெண்களின் பிரச்சனைகள். இப்படிப் பலவற்றைத் தெரிந்துகொண்டேன் என்னை, என்னைச்சுற்றியுள்ள சாதியின் பெயரால், பணத்தின் பெயரால், மொழி, மதங்களின் பெயரால் பிளவுப்பட்டுப் போயிருக்கும் இந்தச் சமூகத்தை நினைக்கும் போது ஒரு பக்கம் வெட்கமாகவும் மறுபக்கம் ஆத்திரமாகவும் இருந்தது. உலகம் எவ்வளவு முன்னேறி எங்கே போய்விட்டது. நாம் இன்னும் கற்காலத்துக்குள்ளேயே எங்களைச் சுற்றி ஒரு மதிலை நாங்களே போட்டுக்கொண்டிருக்கிறோம். உலகில் புதிய பரிமாணங்களுக்கேற்ப ஏற்படும் சமகால வளர்ச்சி ஏன் ஏற்படாமல் போனது. இதற்கு யார் காரணம். இப்போது எனக்கு எல்லாமே விளங்கியது. நமது பெண்விடுதலை என்பது முதலாளித்துவத்தின் கோரப்பிடிகளில் சிக்கியிருக்கும் நமது சமூகத்தின் ஒட்டுமொத்தமான விடியலின் ஒரு பகுதி. பெண் விடுதலை ஒரு தனிப் பிரச்சனை அல்ல. இது நமது சமூக பிரச்சனைகளின் ஒரு அங்கம். சமத்துவப் பொருளாதார அடிப்படையில் நமது சமூகம் புதிய பரிமாணம் பெறும் போது பொருளைத் தாரமாக்கும் நமது பிரச்சனைகள் கரைந்து போகும். நமது சமூகத்துக்கு விடியலை ஏற்படுத்தக் கூடியவர்கள் உழைக்கும் மக்கள்தான்.

இப்படியான தெளிவுகளுடன் இருந்த எனக்குள் இப்போது விடை காணவேண்டிய கேள்விகளே இல்லை. ஆனால் பல கனம் கொண்ட புதிய கேள்விகள் இப்போ தோற்றம் பெற்றன.

நமது சமூக விடியலுக்கு நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்க்கை முழுவதும் உழைக்க வேண்டும். இது வரலாற்றுக் கடமை. அப்படியானால் நான் என்ன செய்கிறேன். ஒன்றுமே செய்யவில்லை. என்ன செய்ய வேண்டும். இதற்காக வாழ்க்கையை முழுமையாகப் பயன் படுத்த வேண்டுமா. அல்லது பகுதியாக செயல்படலாமா. இப்படி உழைச்சல்பட்டுக்

கொண்டிருக்கும் போது ஒரு புதிய வழி கிடைத்தது.

நமது ஊரின் ஒரு பகுதியில் வாழ்ந்து வரும் கூலித் தொழிலாளர்களின் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் காலம் காலமாக நாட்கூலிவேலை செய்து பிற்காலங்களில் தொழிலாளர்கள் கஷ்டப்படுவதும், பொருளாதாரக் குறையால் பிள்ளைகள் படிக்கப் போகாமல் வேலைக்குப் போவதும் இதனால் உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் போவது. தமது இந்த வாழ்க்கை தலைவிதி என்று நினைப்பது போன்றவற்றிலிருந்து இவர்களை விடுவிப்பது. அமைப்பு ரீதியாக்கி இவர்களின் பிரச்சனைகளை தீர்க்கப் போராடுவது போன்ற பல நல்ல திட்டங்களை இவ்வமைப்பு செய்ய முன்வந்தது.

எதுவுமே செய்யாமல் இருப்பதைவிட இவ்வமைப்பினூடாக நமது பங்களிப்பை செய்ய விரும்பினேன். எனது கருத்தை ஆதூஜனிடம் சொன்னேன். ஆதூஜனுக்கு திருப்தியாக இல்லை. ஏன் என்பது எனக்கு விளங்கவில்லை. ஆனாலும் எனது உறுதியினால் ஆதூஜன் வேறு வழியின்றி ஒத்துக் கொண்டார்.

இந்த அமைப்பை நடத்துவது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை. காரணம் நமது சமூகத்திலுள்ள சாதியின் பெயரால் பார்க்கப்படும் பார்வை. இதனால் அநேகமானோர் ஒதுங்கிக் கொண்டனர். ஆறு பேர்தான் மிஞ்சினோம். ஆரம்பத்தில் தொழிலார்களை கூப்பிட்டு வகுப்புக்கள் நடத்தினோம். அவர்களுக்கு திருப்தியாகவில்லை. காரணம் அவர்களுக்கு எதுவுமே விளங்கவில்லை. சிதம்பரசக்கரத்தை பேய்பார்ப்பது போலிருந்தது. அவர்களைவிட நமக்குள் சோர்வு. ஒருவர் வெளியேற ஐந்துபேர் மிஞ்சினோம். தொழிலாளர்களின் வரவு வகுப்புக்களுக்குக் குறைந்து கொண்டே வந்தது. வகுப்புக்களை நிறுத்திவிட்டு இப்போதைக்கு அவர்களின் அன்றாடப் பிரச்சனைகளில் நாம் உதவி செய்து முதலில்

அவர்களை வென்றெடுப்பது என யோசித்து நடைமுறைப் படுத்த தொடங்கினோம்

இவர்கள் தங்களுடைய சொந்த இலாபங்களுக்காகத்தான் எங்களிடம் வந்திருக்கிறார்கள் என்றும் ஒரு கதை கட்டிவிட்டார்கள். இவற்றைக்கண்டு சோர்ந்து போய்விடவில்லை. மத்தியானம் இரண்டுமணிவரை பாடசாலை பின்பு நேராக தொழிலாளர்களிடம் செல்வது. இரண்டு மணிநேரம் அங்கே பிரயோசனப் படுத்துவது. பின்பு வீட்டுக்கு நானும் ஆதூஜனுமாக வீட்டு வேலைகளை செய்வது, இப்படியாக ஓடிக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில் ஒத்துப் போன ஆதூஜன் பின்பு கொஞ்சம் கொஞ்சமாக முரண்படத் தொடங்கினார். தனது உடுப்புக்களைத் தோய்க்கவில்லை என்று சீறுவார். நான் பொருட்படுத்தவில்லை. எனது சம்பளத்தின் ஒருபகுதியை நான் இயங்கும் அமைப்புக்கு கொடுத்து வந்தேன். அதுவும் ஆதூஜனுக்குப் பிடிக்கவில்லை.

ஒரு நாள் நான் சற்றும் எதிர்பாராத குண்டு ஒன்றைப் போட்டார்.

நிஷா நீ அந்த சாதி குறைந்தவர்கள் பகுதிக்கு போவது எனது அப்பாவுக்கு பிடிக்கவில்லை. நிறுத்தி விடு.

என்னால் இந்த வார்த்தைகளை நம்ப முடியவில்லை. எனது ஆதூஜனா இப்படிப் பேசுவது. சாதிக் கொடுமை, பெண்விடுதலை, சமூகவிடியல் என்றெல்லாம் பேசிய இவரா இப்படிப் பேசுவது.

உங்கள் அப்பாவிற்கு பிடிக்காது என்பது தெரிந்த விடயம். நாம் அப்பாவுடன் குடும்பம் நடத்தவில்லை. உங்களுடைய கருத்து என்ன?

நீ இதைச் செய்யிறதாலை ஊரிலை எல்லாரும் எங்களை ஒதுக்குவினம். சனங்களை ஒதுக்கிப் போட்டு எங்களாலை வாழேலாது.

நாங்கள் இந்தச் சமூகத்தைப் புரிந்து கொண்டுதான் இந்த வேலைகளை செய்ய தொடங்கினோம். எங்களுக்கு தெளிவும் உறுதியும் இருக்குதுங்க. அவர்களுடைய பக்கமே நாங்கள் போய்விட்டால் எங்களுக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம். அவர்கள் அப்படித்தான் செய்வார்கள். ஆனால் நாங்கள்.......

நீங்கள்தான் அடிக்கடி சொல்லுவீர்களே, இவர்கள் என்ன எங்களை ஒதுக்குவது நாங்களே ஒதுக்குவோம் என்று. இப்போது நீங்களா இப்படி.....

இவர்களினால்தான் அந்த கூலித் தொழிலாளர்கள் இப்படியாகிப் போனார்கள் என்பது உங்களுக்கு தெரியாதா?

நீ எனக்கு இவற்றைப்பற்றி 'அட்வைஸ்' பண்ணுகிறாயா. நான் உன்னுடைய புருஷன். நான் சொல்லுறதை நீ கேட்க வேணும். நீ அங்கே போகக் கூடாது. ஆதூஷன் கத்தினார்.

நீங்கள் பேசிய பெண்விடுதலை இதுவா. நான் உங்கள் அடிமையா. எனது உணர்வுகளுக்கு நீங்கள் மதிப்பு கொடுக்கமாட்டீர்களா. நான் தெளிவாய் இருக்கிறேன். நான் உறுதியாகச் சொல்கிறேன். நான் கடமையைச் செய்வேன்.

முறைத்துப் பார்த்துவிட்டு ஆதூஷன் வெளியே போய்விட்டார்.

எங்கள் சமூகத்தின் குறைபாடுகள் எங்களுடன் ஒட்டிக் கொண்டிருப்பது ஒன்றும் புதிதில்லை. அவற்றை நாம் அறிவுபூர்வமாக அகற்றவேண்டும். ஆதூஷனால் அது முடியவில்லை.

வெறும் புத்தகப்பூச்சிதான் ஆதூஷன் என்பதை நான் புரிந்து கொள்ள இன்னுமோர் சம்பவம் நடந்தது.

நிஷா உனது அப்பா தனது சொத்துக்களையெல்லாம் அம்மன் கோயிலுக்கு எழுதி வைக்கப் போகிறாராம். இன்றைக்கு உங்கள் சித்தப்பாவைப் பார்த்தேன், சொன்னார்.

அதுக்கென்ன, நாம்தான் வேண்டாம் என்று

www.padippakam.com

விட்டுவிட்டோமே.

அது இல்லை நிஷா. வீணாக கோயிலுக்கு எழுதிவைப்பதைவிட நாங்கள் வாங்கலாம் தானே.

நாங்கள் வாங்கினால் அதுக்குப் பெயர் சீதனம் தானே.

அதுக்கு என்ன பெயர் சொன்னால் என்ன வீணாக கோயிலுக்கு போவதைவிட நாங்கள் வாங்கலாம்.

அப்பா தருகிறேன் என்ற போது வேண்டாம் என்றீர்களே.

சொன்னேன்தான், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் ஐந்து லட்சம் என்றால் சும்மாவா. அதை அநியாயமாக போகவிடக் கூடாது.

எனக்கு முன்னால் ஆதூஷன், ஆதூஷனாகத் தோன்றவில்லை. ஒரு புழுவாக தெரிந்தார். என்னால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை.

சீ நீங்களும் ஒரு மனிதரா. உங்கள் கருத்துக்களுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்தேன். எல்லாவற்றையும் ஒரு நொடியில் தவிடு பொடியாக்கி விட்டீர்களே. நீங்கள் பேசியதெல்லாம் ஊருக்கு உங்களை முற்போக்காளராய்க் காட்ட, உங்கள் நிஜ வாழ்க்கையை அந்தக் கருத்துக்களின் படி வாழ உங்களால் முடியவில்லை. தொழிலாளர்களுக்கு நான் வேலை செய்வதை சாதாரண மனிதராய் சாதியின் பெயரால் தடுத்தீர்கள். உங்கள் உடுப்புக்கள் தோய்க்க நேரமில்லை அமைப்பு வேலை செய்யப் போகிறாய் என்று எரிந்து விழுந்தீர்கள். நான் ஒன்றும் மெசின் இல்லை. குடும்பத்தில் எல்லா வேலையும் இருவரும் பகிர்ந்து செய்ய வேண்டுமென்று வெளியே பேசுகிறீர்கள். நடைமுறையில் இல்லை. சீதனம் வேண்டாமென்று பெருமையாகப் பேசினீர்கள். இப்போது பணம் பாழாய் போகிறதே என்று நீலிக் கண்ணீர் வடிக்கின்றீர்கள். நீங்கள் பேசுவது ஒன்று செய்வது ஒன்று. உங்களைப் போன்ற போலிகள் மிகவும் ஆபத்தானவர்கள். உங்களுடன் கொள்கையில் முரண்பட்டுக் கொண்டு என்னால் வாழமுடியாது.

www.padippakam.com

நிஷா அதிகப்பிரசங்கித்தனமாய் பேசாதே. இந்தச் சமூகத்தை திருத்த முடியாது. நாம் நம் வழியைப் பார்ப்போம்.

சபாஷ். அது சரி சமூகத்தை திருத்த நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள். எதுவுமே செய்யவில்லை. பின்பு எப்படி சமூகம் திருந்தும். முடியாது என்று எதுவுமேயில்லை. நாங்கள் படித்த வரலாறுகள் ஒன்றும் கற்பனைக் கதைகள் அல்ல. முதலாளித்துவ மலைகளை தவிடு பொடியாக்க அனைத்து மக்களும் அமைப்பாக அணிதிரண்ட சரித்திரங்கள். இங்கு அது ஒரு நாள் நிகழும். உங்களுடன் வாழ்வதைவிட அதற்காக எனது கடமையை செய்வதையே நான் விரும்புகிறேன்.

பொருளை தாரமாக்குவதுதான் வாழ்க்கை என்றான் ஆதுரஷன்.

பொருளாதாரம் சமத்துவமாக்கப்படுவதே வாழ்க்கை என்றேன் நான்.

முடிவு.

கொள்கையில் ஒத்துப் போக முடியாத எங்களால் வாழ்க்கையில் ஒத்துப் போக முடியவில்லை. விவாகரத்து செய்துவிட்டோம்.

சொல்லிமுடித்த நிஷாந்தி ஆறிப் போயிருந்த தேனீரை குடித்து முடித்தாள்.

ஷோபனாவுக்கு நிறைய விடயங்கள் மலையாளப்படம் பார்ப்பது போல எதுவுமே புரியவில்லை.

நிஷாந்தி தெளிவாக புன்சிரிப்புடன் இருந்தாள். இரண்டாம் வகுப்பு மாணவர்களும் அம்பிகா ரீச்சரும் பன்னிரண்டாம் வாய்ப்பாட்டை உச்சரிப்பது காற்றில் மிதந்து கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# மன்னாரில் 30 ஆயிரம் ஏக்கர் நெற்காணிகள் பாதிப்பு

## மல்வத்த ஓயா ஆற்றுக்கு குறுக்கே அணைக்கட்டு அமைக்கப்படுவதன் எதிரொலி

அநுராதபுர மாவட்டத்திலுள்ள கல்கடவலை என்ற இடத்தில் மல்வத்த ஓயா ஆற்றுக்கு குறுக்காக அணைக்கட்டு ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது. 18 மில்லியன் ரூபா செலவில் போடப்படும் இவ் அணைக்கட்டின் பயனாக 4300 ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு திட்டமாகும். ஆனால் இவ் அணைக்கட்டு அமைக்கப்பட்டதின் பின் மன்னார் மாவட்டத்தில் உள்ள 30 ஆயிரம் ஏக்கர் நெல்வயல்கள் பாசன வசதியின்றி பாதிப்படையும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

கடந்த 100 வருடங்களுக்குமேலாக மன்னார் மாவட்டத்திலுள்ள அகத்திமுறிப்பு நீர்த்தேக்கம் மல்வத்த ஓயாவிலிருந்தே நீரைப்பெற்றுவருகின்றது. ஆனால் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் அம்மக்களையே ஊடறுக்கும் வகையில் மேற்கொண்டு வரும் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களையும், அம்மக்களின் பொருளாதார வளங்களை சிதைக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவரும் ஆளும் பேரினவாதிகளின் சூழ்ச்சித்திட்டத்தின் மற்றொரு நடவடிக்கையாக இப்புதிய முயற்சியின் மூலம் மன்னார் மாவட்ட விசாயிகளின் பாரம்பரிய உரிமை பறிக்கப்பட்டு இப்புதிய திட்டத்தின் மூலம் கிடைக்கவிருக்கும் 4300 ஏக்கருக்கு பாசன வசதிகளை சிங்களப்பகுதிகளுக்கு பயன்படுத்துவதுடன் நன்னீர் நீர்த்தேக்க மீன்பிடி போன்ற திட்டங்களுடன் மன்னார் மாவட்டத்தின் எல்லையை அண்டியுள்ள பிரதேசத்தில் குடியேற்றத்திட்டங்களை மேற்கொள்வது போன்ற திட்டங்களுடன் செயற்பட்டு வருகிறது பேரினவாத அரசு.

அகத்திமுறிப்பு நீர்த்தேக்கத்தை சூழ்ந்துள்ள பிரதேசம் ஏக்கருக்கு 120 புசல் வரையான விளைச்சலைக் கொண்டது. பெரும் போகத்தில் சுமார் 30 ஆயிரம் ஏக்கருக்கு இந்நீர்த்தேக்கத்தின் மூலம் நீர்வசதி பெறப்படுகிறது. எனவே அப்பிரதேச மக்களின் முக்கிய தொழிலாக நெற்செய்கை காணப்படுவதால் மக்களினது பொருளாதாரத்தையும் மண்ணையும் பாதுகாக்க இப்பிரச்சனை குறித்து உறுதியான முடிவு எடுக்கப்படவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# சங்கரப்பிள்ளையின்

## சிந்தி அரசியல் - ஆறு

சங்கரப்பிள்ளையர் தனது பருத்த உடம்பைக்கொண்டு குனிந்து வளைந்து வெங்காயத்துக்கிடையில் இருந்த களைகளைப் பிடுங்கிக்கொண்டிருந்தார். முன்னூறு கன்று வெங்காயத்துக்குள்ளை நானூறு கன்று சணப்படிச்ச சாறணை. போலவாட்டி எக்கச்சக்கமாய் கிடக்கென்று எத்தனையோ மருந்துகள் அடிச்சுக் கொஞ்சம் குறைஞ்சமாதிரி கிடந்தது. திரும்பவும் திடு திடு என்று விளைஞ்சிட்டுது. நான் வெங்காயம் நட்டிருக்கிறனோ

சாறணை நட்டிருக்கிறனோ ஒண்டுமாய் விளங்கேல்லை. வாத்தியார் உங்கடை பக்கம் எப்படி அங்கேயும் சாறணைதானோ.

பக்கத்துக் காணிக்குள் வெங்காயத்திற்கு தண்ணீர்கட்டிக்கொண்டிருந்த வாத்தியாரிடம் பிள்ளையர் குறைப்பட்டுக் கொண்டிருந்தார்.

நம்ம நாட்டுப் பிரச்சனையும் உம்முடைய வெங்காயமோ சாறணையோ என்டு தெரியாதமாதிரித்தான் போய்க்கொண்டிருக்கு. வெங்காயம் விளைய சாறணை விடமாட்டுது போலத்தான்கிடக்கு மடைச்சனங்கள் சாறணையைப் பார்த்து வெங்காயம் என்டு நினைக்கிற வெங்காய சிந்தனையைத்தான் சகிக்க முடியவில்லை.

வாத்தியார் பொடிவைத்துப் பேசினதிலை பிள்ளையருக்கு ஒண்டுமே விளங்கயில்லை. பிள்ளையர் இந்தச் சனியன் சாறணையை பிடுங்கி ஒளிக்கேலாது வாத்தியாரோடு கதைச்சால் நாட்டு நடப்பாவது விளங்கும் என்று சொல்லிக்கொண்டு வாத்தியாரின் காணி வரம்பில் வந்து குந்திக் கொண்டார்.

பிள்ளையர் களைபிடுங்கிற லட்சணத்தைப் பார்த்து சிரித்துக்கொண்ட வாத்தியார்

என்ன பிள்ளையர் அலுத்துக் கொள்ளுகிறீர். நாட்டிலையும் சரி தோட்டத்திலையும்சரி களைபிடுங்கிறது என்கிறது லேசான வேலையில்லை. உம்மைப்போல ஆட்கள் ஏலாது என்டு விடுகிற தாலைதான் சாறணை வளர்ந்து பயிரை மறைக்குது. சாறணை இல்லாட்டித்தான் வெங்காயம் விளையும் என்டால் உறுதியாக களைபிடுங்கியாக வேண்டும்.

வாத்தியார் எதாவது சொல்லுகிறதென்டால் விளக்கமாய் சொல்லுங்கோ உதுக் கோசக்கமாசக்க கதைவேண்டாம்.



படிப்பகம்

www.padippakam.com

உள்பாத்திக்கு தண்ணிகட்டிவிட்டு மடையைத் திருப்பி பெரிய வாய்க்காலுக்கு தண்ணியைவிட்ட வாத்தியார் பிள்ளையரைப் பார்த்து குறும்பாக சிரித்துக் கொண்டு காலால் தண்ணியை கலக்கிக்கொண்டு அடுத்த பாத்திக்கட்டுக்குப் போனார்.

என்ன வாத்தியார் வரதர் ஓடிவிட்டாராம் என்ன இருந்தாலும் மாத்தையாவும் பொடியங்களும் ஆட்கள் கெட்டிக்காரர் தான். எலமேண்டா நிண்டு பாத்திருக்க வேணும்.

அது சரி உம்மைப்போ ஆட்களை மோதவிட்டு வழியிற இரத்தத்திலை வேடிக்கை பார்க்கிற ஆட்களுக்கு சண்டையே இல்லாமல் போனது சப்பெண்டு போனது மாதிரித்தான். இருக்கு. வரதரும் EP பொடியளும் இப்பவே முதன்முதலில் ஓடினவங்கள். 86லையும் ஓடினவங்கள்தான் அப்பவும் புலியள் சொல்லிச்சினம் EP யை அடியோட அழிச்சுப்போட்டம் எண்டு அவங்கள் திரும்பவும் வந்து சனங்களுக்கு குண்டும் குழியுமாய் இருந்த பாதைக்குக் கல்லைப்போட்டு தார் ஊற்றி நடந்து வழிகாட்டின மாதிரி குழம்பிப்போயிருந்த நிலைமையை மாகாண சபையினூடாக சரிப்படுத்தினவங்கள். அந்த நேரங்களிலை எல்லாம் கைகொட்டிச் சிரிச்சியள் இப்ப புலிகளும் நீங்களும் மாகாண அரசுதான் சுதி எண்டு கிடக்கிறியள். ஆனால் என்ன நடக்குமென்டு எங்களுக்கு விளங்கும். உங்களுக்கு விளங்காது நடக்கேக்கே முழிக்கப்போறியள் ஆனால் ஒண்டு சொல்லுறன் இப்ப பொடியள் பின்வாங்கி இருக்கிறதாலதான் நீங்கள் உயிரோடு இருக்கிறியள். நீங்கள் திரும்பவும் இந்த சாறணையாலை வெங்காயம் விளையாது போலகிடக்குது எண்டு ஏங்கித் தவிக்கேக்கிலை சாறணை புடுங்க வருவாங்கள். உங்கட வெங்காயம் விளைய சாறணை களைய அந்த EP பொடியள் வேணும் வெங்காயம் விளைஞ்சாப்பிறகு நாங்கள் தான் விளைவித்தது எண்டு புலிகள் உரிமை கொண்டாடினால் நீங்களும் கோயில் மாடுகள் மாதிரி தலையாட்டுவியள். எப்பதான் திருந்தப் போறியளோ.

பிள்ளையருக்கு வியாக்கியானம் செய்ததிலை தண்ணி பாத்திக்குள்ளை முட்டி உடைச்சு அடுத்த பாத்திக்குள் போய்க்கொண்டிருந்தது. வாத்தியார் மண்ணை வாய்க்காலில் இருந்து விறாண்டி அள்ளி உடைச்ச இடத்தை அடைச்சுப் போட்டு மடையைத் திருப்பினார்.

என்ன வாத்தியார் யோட்டுக் குழப்பியள். பேப்பரைப் பார்த்தால் புலியளின் சொல்லுறது சரிபோலகிடக்கு நீங்கள் சொல்லுறதை பார்த்தால் செய்யிறது சரிபோலகிடக்கு.

பிள்ளையர் உம்மைப்போல கனசனம் குழப்பங்கள் உங்களுக்கு தெளிவு வந்தாலே அரைவாசி பிரச்சனை தீர்ந்த மாதிரித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

அது எப்படி வாத்தியார் குழம்பாமல் இருக்கிறது . அமிர்தலிங்கத்தை தாங்கள் கொலை செய்ய இல்லை என்டு புலிகள் அறிக்கை விட்டினம். இப்ப என்னடா என்டால் பிரபாகரனை வியியாவுக்கு கூட்டிக்கொண்டு போக இல்லை என்டு நாங்கள் தான் கொலை செய்தனாங்கள் என்கிறார் யோகி. தம்பி இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் இன்னும் குழப்புகிறார். யோகி என்னட்டை சொன்னவர் தாங்கள் கொலைசெய்யவில்லை என்டு என்கிறார். இந்தியாவின் ஏஜென்டாக இருந்தகாலை நாங்கள்தான் கொலை செய்தனாங்கள் என்டு மாத்தையா பேப்பர் ஒண்டுக்கு சொல்லியிருக்கிறார்

"அமிர்தலிங்கம் கொலை தொடர்பாக நாங்கள் ஒருவரை கைது செய்திருக்கிறோம் அவர் புலி உறுப்பினர் ஆகவே கொலை செய்தது புலிகள் என்கிறார் பொலிஸ் அதிகாரி . அதே அதிகாரி நாங்கள் பிடித்து வைத்திருப்பவரின் பெயர் மரியதாஸ் அவர் புலி இல்லை என்கிறார். இதுகள் எல்லாத்தையும் வாசிக்கேக்கை தலைமயிரைப் பிடுங்கிக்கொண்டு றோட்டிலை ஓடவேணும் போலகிடக்குது."

பிள்ளையர்

இதென்ன பிரமாதம் இன்னும் கொஞ்சக்காலம் பொறுங்கோ நடந்து முடிந்த எத்தனையோ கொலைகளுக்கெல்லாம் விளக்கம் கிடைக்கப்போகுது

"அப்ப நீங்கள் தலைமயிரைப் பிடுங்கிற பிடுங்கலை றோட்டெல்லாம் மொட்டையர் கூட்டமாய் திரியப்போறியள்.

இதுக்கென்னதான்

வழியள் என்னுறியள் வாத்தியார்."

இந்தப்பிரச்சனைகளிலை இருந்து ஒதுங்காதேங்கோ சரிபிழை என்டு குழம்பாமல் கடந்தகால அனுபவங்களை கொண்டு ஒரு கொலையை ஆர்செய்தினம் என்டதை புரிஞ்சு கொள்ளுங்கோ . பிழையானவர்களை, அநியாயக்காரர்களை விரட்டி அடிக்க றோட்டிலை இறங்குங்கோ . நாப்பது லட்சம்பேர் இருக்கிறதாய் மார் தட்டுறியள். அந்நியைக் கண்டிச்சு எத்தனைபேர் றோட்டிலை இறங்குறியள். இதிலை வேடிக்கை என்னவென்டால் கொலைகாரர் தங்களுக்கு வேண்டாதவர்களைப் பார்த்து கொலைகாரர் என்டு சொன்னால் நீங்களும் ஆமா என்டு தலையாட்டுறியள். காலம்போகசிலை உண்மையினை உணருறியள் ஆனால் திருந்தின பாடில்லை".

சரி வாத்

தியார் அதைவிடுங்கோ EROS இரத்தின சபாபதி பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிவிட்டாராமே உண்மையே வாத்தியார்."

வாத்தியார் நிமிர்ந்து ஏளனமாக பி

ள்ளையரைப் பார்த்துவிட்டு "என்ன சொன்னனீர் ஈரோசா இந்தச் சொல்லை எங்கேயோ கேட்டமாதிரிக் கிடக்குது, எட எங்கட பாலகுமாரின்ரை இயக்கம். அதைச்சொல்லுறீரோ அது இப்ப இல்லை". அதை இப்ப புலிகளின்ரை பிரச்சாரப்பிரிவாக மாத்திப்போட்டினம்.


படிப்பகம்

www.padippakam.com

ம். பேப்பரிலை பார்த்தால் விளங்குமே. சங்கர்ராஜிக்கும் பாலகுமாருக்குமிடையில் பிடுங்குப்பாடு என்டு பொடியள் குசுகுசுக்கிறாங்கள் உண்மையோ தெரியவில்லை நமக்கென்ன மயிர்ச்சு சந்தைக்கு வரும் தானே. உந்தப்பிடுங்குப்பாடிலைதான் இரத்தினாருக்கு கோமா வந்ததென்டு சொல்லுகினம் யாருக்கு தெரியும்.

பிள்ளையர் அடுத்த முறை இறைப்புக்கு தரவைக்குள்ளை வாறசனிக்குளினை நாட்டிலை என்ன நடக்குமோ தெரியவில்லை. அந்த அன்புக்கு நாடு குழம்பிப்போய் கிடக்குது. நான் வாறன் என்டு சொன்ன வாத்தியார் பூசினியை நிமி யாட்ட போனார்.

பிள்ளையர் சாறனை ஒரு வெருளியோடு யார் அரை போட்டு கணைபிடுங்கின கணையோடு வீட்டுக்கு நடையைக் கட்டினார்.

## வெளிவரும் புதிய சஞ்சிகைகள்

**மண்**

**தொடர்புகளுக்கு**

P. AMIRTHANATHAN
BRAUNS BERGER WEG-41
4100 DUISBURG-26
W-GERMANY.

**பள்ளம்**

**தொடர்புகளுக்கு**

K. KANAGASINGAM
39, RUE DELA JONQUIERE
75017 PARIS
FRANCE.

**தளிர்**

**தொடர்புகளுக்கு**

THALIR
ARBEITSGEMEINSCHAFT
FUR AUSLÄNDERFRAGEN
H.M. SCHLEYERSTRASSE-15
7032 SINDELFINGEN
W-GERMANY.

**அக்கினி**

AGNI
ALLEEN STR-17
7144 ASPERG
W-GERMANY.



படிப்பகம்

www.padippakam.com

# வன்னியில் மலையக மக்களின் இன்றைய நிலை

இலங்கை தேசியப் பொருளாதாரத்தின் ஜீவநாடியான தேயிலைப் பயிர்ச்செய்கையை உற்பவித்த பெருந்தோட்ட மலையகப் பாட்டாளிகள் தேசிய இனப் பிரச்சினையினூடாக இலங்கையின் பல மாவட்டங்களுக்கு குறிப்பாக, வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு 1958 முதல் குடிபெயர நேரிட்டது. இலங்கையில் ஏற்பட்ட, இன, வன்முறைக் கலவரங்களில் இவர்கள் பெரிதும் பாதிப்புற்றதே இத்தகைய குடிபெயர்வுக்குக் காரணமாய் அமைந்தது. வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, அரசின் இன ஒடுக்குமுறைக்கெதிராக, தமிழர்கள் எதிர்ப்புகளை ஆரம்பித்த பொழுது. பேரினவாதிகளின் சூழ்ச்சிகளினால் தமிழர் மீது சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட கசப்புணர்வு அப்பாவி மக்களாகிய மலையக, மற்றும் தெற்கில் வாழ்ந்த மக்களை துன்புறுத்தலுக்குள்ளாக்கியது.

தனிச்சிங்கள சட்டத்தின் முதலாவது அத்தியாயமான சிங்கள 'சிறி' கலவரம் மூண்ட பொழுது பாதிப்புக்குள்ளான கணிசமான இந்திய வம்சாவளியினர் வன்னிப் பிரதேசங்களில் வாழத்தலைப்பட்டனர். 77, 83 போன்ற பரவலான வன்செயல்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வடகிழக்கில் குடியேறினர்.

## அகதிகளாக இடம் பெயர்வு

77களில் அகதிகளாக வந்த மலையக இந்திய வம்சாவளியினரில் குடியுரிமையுள்ளோரை அரசியல் லாபம் தேடுவோர் புகலிடம் அளித்து வாக்கு எண்ணிக்கையை கூட்டிக்கொண்டனர். குடியுரிமை, வாக்குரிமையற்ற மலையக மக்கள் உதிரிப்பாட்டாளிகளான இந்திய வம்சாவளியினர் அடாத்தாக காணிகளில் வெட்டிக் குடியேறியபோது பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. சிறிலங்கா அரசின் உள்ளூராட்சி நிர்வாகத்திலுள்ள அதிகாரிகள் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை இவர்களுக்கு காணி வழங்குவதில் முட்டுக்கட்டையாக விளங்கினர். அனுமதிப் பத்திரங்கள் வழங்க குடியுரிமை, ஆவணங்கள் போன்றவற்றையும் அதற்கு மேலாக உள்ளூர் முதலாளிகளின் காணி. விஸ்தரிப்புக் கொள்கைகளுக்கு ஆதரவுமாயிருந்தனர்.

ஆனால், பாட்டாளி மக்களின் நலன்கள் மேல் அக்கறையுள்ள அமைப்புகள் பல இம்மக்களின் குடியேற்றத்திற்கு உதவின. மறைந்த தொழிற்சங்கவாதி திரு. வை.சி. நித்தியானந்தா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியின்று பல்வேறு அமைப்புக்கள் பணம் பெற்று குடியேற்றத்திட்டத்தில் உதவினர் என்பது நாடறிந்த விடயம்.

இதே மக்களின் குடியேற்றத்தை ஒரு கருவியாகக் கொண்டு ஒரு சில மலையக தொழிற்சங்கங்கள் சந்தாப் பணமும், அரசியல் லாபத்தையும் சம்பாதித்தன. பல சந்தர்ப்பங்களில் தாங்கள் வெட்டித் திருத்திய காணிகளிலிருந்து இம்மக்கள் பலவந்தமாக அல்லது ஏதோ ஒரு விதத்தில் வெளியேற வேண்டிய, ஏமாறும் சூழ்நிலை இருந்தது.

## நிலையான வசிப்பிடம்

கால மாற்றங்களினூடாகவும், அரசியல் மாற்றங்களினூடும், இவ்வன்னிப் பகுதியை வாழும் பகுதியாக மலையக மக்கள் மாற்றிக்கொண்டனர். ஆனால் ஜே. ஆர். ஆட்சியின் பின் நாடளாவிய முறையில் இந்திய வம்சாவளியினருக்குப் பிரசாவுரிமை வழங்கப்பட்டதென இவ்வரசு அறிவித்தது. ஆனால், நடைமுறையில் ஒன்றும் சாத்தியப்படவில்லை. இன்னும் இம் மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. 1985 இன் பின் இராணுவ நடவடிக்கைகளின் பின் பல்வேறு இடங்களுக்கும் இந்தியாவிற்கும் அகதிகளாய் புகலிடம் தேடிப் போனமக்கள் மீளக் குடியமர்விலும் நிவாரணம் பெறுவதிலும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கணிசமான குடும்பத்தினரின் இளைஞர்கள் போராட்ட காலகட்டங்களில் பூசா முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். பலர் வதையாகினர், பல இளைஞர்கள், யுவதிகள், முதியோர், குழந்தைகள் கொல்லப்பட்டனர். இன்றும் அரச வேலைவாய்ப்பின் போது இவர்களிடம் பிரசாவுரிமை ஆவணங்கள் கோரப்படுகின்றது. அதே வேளை அரசால் சகலருக்கும் பிரசாவுரிமை வழங்கப்பட்டுள்ளது, என்பது வெறும் நிழலாகவே இருப்பது இம்மக்களின் அடையாள அட்டை, மற்றும் கடவுச் சீட்டுப் பெறுவது தடைப்பட்டுள்ளது.

புனர்வாழ்வின் மூலமோ அன்றி அரசு உதவிகளின் மூலம் இவர்களுக்கு காணிப் பங்கீடு என்பது கனவு நிலையாகவுள்ளது நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள வயற்செய்கை காணிகள் பெரும்பாலும் பூர்வீகமாக உள்ளவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

மலைவாணன்



படிப்பகம்

www.padippakam.com

### இரண்டாம் தரப் பிரஜைகள்

இன்றும் இந்தமக்கள் இரண்டாந்தரப் பிரஜைசளென்ற வடிவமைப்பில் வாழ்வதையே காண முடிகிறது. கல்விப் பிரச்சனையில் பெரும்பாலான மலையக மக்களின் பிள்ளைகளை க.பொ.த. ப. வகுப்பிற்கு நகர்ப்புறங்களுக்கு அனுப்ப பொருளாதார போதாமையுள்ளது. மற்றும் நான்காம், ஐந்தாம் வகுப்பிற்கு பின்னர் தமது பிள்ளைகளை வறுமைச் சூழ்நிலையால் பள்ளிக்கு அனுப்புவதில்லை. பெரும்பான்மையானோர் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்றனர். இவர்கள் தோட்ட வேலைகளையும் வெளாண்மை வேலைகளையும் கூலித் தொழிலாகக் கொண்டிருப்பதால் வறட்சி நாட்டின் நெருக்கடி. நிலை காரணமாக இத்தொழில் வாய்ப்பு தொடர்ச்சியாக கிடைப்பதில்லை. அத்துடன் மின்சார தடைப்படுத்தலினால் ஆலைகளில் வேலை செய்பவர்களும் வேலையற்றுள்ளனர்.

இவர்களுக்கான நிலையான பொருளாதாரத் திட்டம் ஏதும் அரசால் முன்வைக்கப்படவில்லை. கல்வி பயின்று வேலை வாய்ப்பிற்றிருக்கும் படித்த பெண்கள் பலர் இருக்கின்றனர். இராணுவ நடவடிக்கைகளின் போதும், மோதல்களின் போதும் முல்லை மாவட்டத்திலுள்ளவர்கள் அகதிகளாக வவுனியாவிற்கு வருகின்றனர். இவர்களில் நிர்வாகத் திறமையுள்ளவர்களை அரசு தெற்குப் பகுதிக்கு வேலைக்கமர்த்துகின்றது தமிழ்ப்பகுதியில் நிர்வாகப் பொறுப்புகளில் இவர்களை நியமித்தாலும் பூர்வீகம் பேசும் மக்கள் இன்னும் சரியாக ஒத்துப்போவதில்லை. வன்னிப்பகுதியில் விவசாயத் தொழில் முதன்மையாக்கப்பட்டாலும் இவர்களுக்கான உறுதி வாய்ந்த விவசாயத் திட்டம் ஏதுமில்லை. இவர்களுக்கு அரசியல் பொருளாதார, நெருக்கடிகளை தொடர்வது வேதனைக்குரியதே. விடிவெப்போது?

நன்றி—விடுதலை

## அன்பான வாசகர்களே!

தங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் வெகுஜனம் பெரிதும் வரவேற்கிறது. ஆக்கங்களை செழுமையாக்கவும் திருத்தவும் ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு என்பதைத் தோழமையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

<u>சந்தாவிபரம்</u>

6 மாதங்களுக்கு..........10,00 DM

1 வருடத்திற்கு...........20,00 DM

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த மற்றைய நாடுகளுக்கு தபாற்செலவு தனி.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

VEKUJANAM
Mittwegstr. 21
4300 ESSEN 1
WEST GERMANY



படிப்பகம்

# என் பிரிய அராஜகவாதிகளே!

கவிதை

சுநிதி
STUTTGART

எங்கள் தேசத்து அராஜகவாதிகளே
உதிரம் கூட உறைந்து போகும்
இந்த
நேரத்தில் உங்களை நினைத்தால்—எங்களுக்கு
போராட்ட உணர்வு சுரக்கிறது.
உங்கள் முகவரியை
நீங்கள் ஏன் என்
தலையில் எழுதிவிட்டுப்
போகிறீர்கள்?
உங்கள் நவீன துப்பாக்கிகளுக்கு
நீங்கள்
இரகசியமாய் இயங்கும்
கலையை எப்படிக் கற்பித்தீர்கள்.
ஜனநாயகத்தையும்
அராஜகத்தையும்
ஒரே அச்சகத்தில்
ஒரே நேரத்தில்
எப்படி அச்சடிக்க முடிகிறது.
எங்கள் போராட்டத்தை
விற்றுக் கொண்டு
நீங்கள்
எங்கேயோ ஒளிந்து கொள்கிறீர்கள்
நாட்டில் அராஜகத்தை வளர்த்துக்கொண்டு
ஜனநாயகத்தை எப்படிக் கதைக்கிறீர்கள்
நீங்கள் உங்களுக்கு சூட்டிய மாலை—எங்கள்
தோழர்களை அழித்தது.
நீங்கள் கட்டிய பொதுக் கூட்டம்
பொது மக்களை அழித்தது.
என்
பிரிய அராஜக வாதிகளே
எங்கள் போராட்டத்தை திருடிவிட தீர்மானமா?

www.padippakam.com

உங்கள் துப்பாக்கிகளால்—எங்கள்
போராட்டத்தை அணைத்துவிட திட்டமா?
எங்கள் போராட்டம்
உழைக்கும் வர்க்கத்தின் உண்டியல்கள்
அவர்கள் அதை பத்திரமாய் பாதுகாப்பார்கள்
என்ன செய்வீர்கள்
எங்களை மக்கள் இல்லாத
தேசத்திற்கு நாடுகடத்திவிட திட்டமா
நாங்கள்
சமூகத்தின் சம்மதத்தோடு
கர்வமாய் இருக்கிறோம்
எங்கள் தாகங்களை அலைகள் பேசும்.

---

45ம் பக்கத் தொடர்ச்சி

தியா அரசினூடாக இலங்கை அரசிடம் நிர்ப்பந்திக்க ஏன் முயலவில்லை. ஐக்கியத்தைப் பற்றிப் பேசும் கலைஞருக்கும் இயக்கங்களின் ஒற்றுமைக்கு யார் ஒத்துழைத்தார்கள் யார் முட்டுக்கட்டையாயிருந்தார்கள் என்பதெல்லாம் தெரியாததல்ல.

ஐக்கியத்துக்காக திறந்திருக்கும் கதவுகளை தட்டுவதை விடுத்து ஐக்கியத்தின் காற்றே உட்புகாதவாறு தனியாட்சி நடத்திக்கொண்டு கதவுகளை இறுக்க மூடியிருப்பவர்களின் கதவுகளை தட்டித் திறக்கலாமே. கலைஞர் அதற்கு எந்த முயற்சிகளையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. ஆக கலைஞரின் இன்றைய அரசியல் நகர்த்தலுக்கு தேவை இயக்கங்களை ஒற்றுமைப்படுத்தல்.

இந்திய இராணுவம் வெளியேறிய கிழக்குப் பகுதிகளில் சிங்களக் குண்டர்கள் மீண்டும் ஆயுதங்களுடன் குடியேற்றப்படுகிறார்கள். இதனால் பயந்து தமிழ் நாடு சென்ற அகதிகளை இலங்கை கடற்படையினர் ஹெலிகளின் உதவியுடன் நடுக்கடலில் வைத்து சிறீ யுத்தபாணிகளான நூற்றுக் கணக்கான மக்களை படுகொலை செய்துள்ளனர். ஆகவே இக்கோரமான கொலைகளுக்குக் கூட மௌனம் சாதித்துக்கொண்டிருக்கும் நிகழ்வுகளைப் பார்த்தால் கலைஞர் ஈழப்பிரச்சனையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தனதோடு பிரச்சனைகளை சிக்கலாக்கி பெரிதுபடுத்துகிறார் என்பதே உண்மை.

---

தவிர்க்க முடியாத காரணத்தினால் இம்முறை "உலகக் கண்ணாடி" என்னும் பகுதியை வெளியிட முடியாமைக்கு வருந்துகிறோம் மறு இதழில் இருந்து வெளிவரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்

ஆ-கு



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு முக்கோணப் பிரச்சனை

P. நவரட்ணராஜா
HANNOVER

தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமும் சமுதாய மாற்றப் போராட்டமும் பல ஏற்ற இறக்கங்களைக் கடந்து 87இல் ஒரு இடைவெளிக்குள் தன்னைப் புகுத்திக்கொண்டது. அதில் ஏற்பட்ட தளர்ச்சியும் வளர்ச்சியும் இன்றுவரை பல தடங்கல்களுடன் தொடர்ந்து வந்துள்ளது. தற்போதுள்ள வடக்கு கிழக்கின் நிலை என்ன. இப்போது இப்பிரச்சனைக்குள் யார் யார் பங்கெடுத்துக்கொள்கிறார்கள். என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு தொடரப்போகும் சூழ்நிலைகளுக்குள் எம்மைப் பங்கெடுக்கவைப்பது போராட்டத்தின் வளர்ச்சிப் போக்குக்கு உதவும்.

இன்றுள்ள சூழ்நிலையை சற்று விரிவாக பார்ப்போமாயின் ஒரு நாற்கோணமாக நகர்ந்து கொண்டிருந்த நமது பிரச்சனையிலிருந்து இந்தியா ஒரு கோணமாக ஒதுக்கி வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதிலிருந்து ஒரு முக்கோணப் பிரச்சனையாக்கப்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்கள் மத்தியிலிருந்து எத்தனையோ இயக்கங்களும் கட்சிகளும் தோற்றம் பெற்றாலும் இன்றைய காலகட்டத்தில் LTTE, EPRLF ஆகிய இரண்டுமே ஆயுத, அரசியல் ரீதியில் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. இலங்கை அரசும், LTTE யும், EPRLF ம் தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க என்ன செய்கின்றன என்பதைப்பார்ப்போம்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைக் கொடுக்க என்றும் முன் வந்ததில்லை. ஆனால் தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்போம், உரிமைகளைக் கொடுப்போம் என்று பலமுறை நடித்திருப்பது ஒன்றும் புதிதில்லை. இந்த நடிப்புக்களில் ஒன்றுதான் மாகாண அரசு. இதன் மூலம் சிறிது காலத்தை கடத்த, போராட்ட இயக்கங்களை மனோவியல் ரீதியாகப் பலவீனப்படுத்த தமிழ் பேசும் மக்களுக்கு, உலகிற்கு நல்ல பிள்ளையாகக் காட்ட நடித்த நடிப்புத்தான் மாகாண அரசு என்பது. அதன் அதிகாரங்களை கொடுக்க மறுப்பதிலிருந்து அல்லது இழுத்தடிப்பதிலிருந்து அதைக்கலைக்க என்ன வழி என்று இப்போதுதான் சட்டமூலங்களை புரட்டுவதிலிருந்து தெட்டமாக தெளிவாகிறது. விடுதலைப் புலிகள் எழுப்பியுள்ள மாகாண அரசு கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடாத்தப்படவேண்டும் என்ற கோஷத்திற்கு இலங்கை அரசும் தலையசைத்துள்ளது. இதனால் இலங்கை அரசிற்கு என்ன லாபம்?


படிப்பகம்

www.padippakam.com

மாகாண அரசை வெறும் பூச்சாண்டியாக காட்டிக்கொண்டிருக்கலாம் என்றே அரசு நினைத்தது. ஆனால் அதை வடிவம் பெறச்செய்வதில் முஸ்லீம் காங்கிரஸ் ( SMC ), ENDLF , EPRLF , ஆகியன பெரும் பங்கெடுத்துக்கொண்டன. பாரிய இழப்புகளைச் சந்தித்தன. EPRLF பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்ததுடன் நின்றுவிடாது அதிகாரங்களைப் பெறுவதில் மத்திய அரசுடன் ஜனநாயக வழிப் போராட்டத்தை தளராது தொடர்ந்து நடத்தியது. இது இலங்கை அரசுக்கு பெரும் தலையிடியாக இருந்தது. இது தவிர மத்திய அரசுடன், ஆட்சியாளர்கள் நடந்துகொண்ட முறைகளில் இவர்களை விலைக்கு வாங்க முடியாது, அத்துடன் இவர்கள் தென்னிலங்கை இடதுசாரிகளுடன் , முற்போக்கு சக்திகளுடன் தமது உறவுகளைப் பலப்படுத்தி இருந்ததால் இவர்களினால் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல இலங்கைத்தீவு முழுவதுமே தமக்கும் தமது வர்க்கக் கூட்டாளிகளுக்கும் ஆபத்து என்பதை மத்திய அரசு புரிந்து கொண்டது. ஆக மொத்தம் EPRLF இனர் அழிக்கப்பட வேண்டும் அல்லது இயங்க முடியாது செய்யப்பட வேண்டும். இதற்கு என்ன வழி என மத்திய அரசு யோசித்துக் கொண்டிருக்கையில் புலிகளின் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை பிரேமதாஸாவுக்கு வழிவகுத்தது. புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்த பிரேமதாஸா அவர்களின் பலம் என்ன பலவீனம் என்ன அரசியல் வளர்ச்சி எத்தனை பாகை என்பதையெல்லாம் புரிந்துகொண்டு அவர்களுடன் நட்புறவை ஏற்படுத்தி அவர்களைக்கொண்டே EPRLF ஐ அழிப்பது , தாம் நல்ல பிள்ளைக்கு நடிப்பது என பிரேமதாஸா நாடகத்தை தொடங்கினார். இதில் இந்தியப்படை வெளியேற்றமும் முக்கியத்துவம் பெறுகிறது. இந்தியப்படை வெளியேற்றத்தை தென்னிலங்கை அரசியல்வாதிகள் மத்திய அரசுக்கெதிரான துரும்பாகத் திருப்பினர். ஆகவே இந்தியப்படைகளை வெளியேற்றுவேன் என பிரேமதாஸா கூறினார். இந்தியப்படைகளுடன் மோதலில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளும் இந்தியப்படைகளை வெளியேற்ற வேண்டுமென்றனர். வடக்குக்கிழக்குக்குள் அரசியல், ஆயுத எதிரியாக இருந்த EPRLF ஐ அழிப்பது, இந்தியப்படையை வெளியேற்றுவது ஆகிய இரண்டிலும் மத்திய அரசும் விடுதலைப் புலிகளும் ஒத்துப் போனமையால் ஒன்று சேர்ந்தனர். இந்தியப்படையை வெளியேற்றுவதற்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியிலிருந்தே துரும்புக் கிடைத்தது பிரேமதாஸாவுக்கு பிரச்சனையில் வெற்றிபெற இலகுவாக்கியது. இதற்கு கைமாறாக விடுதலைப் புலிகள் மாகாண சபை கலைக்கப்படவேண்டும், புதிய தேர்தல் நடாத்தப்படவேண்டுமென்றனர். இதிலும் இலங்கை அரசுக்கு இலாபங்கள் உண்டு.

தேர்தல் நடத்தப்பட்டால் வடக்குகிழக்கில் UNP கட்சிக்கு ஏற்பட்டுள்ள வளர்ச்சியை கணிப்பிட ஒரு தேர்தல் மானியாக இத்தேர்தல் அமையும்.

வடக்குகிழக்கு இணைப்பு தற்காலிகமானது. இதற்கு ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படவேண்டும். இதை ஜனாதிபதி விரும்பி



படிப்பகம்

ன தள்ளிப்போட வழியுண்டு. பிரேமதாஸாவும் தள்ளிப்போட்டுக்கொண்டே வருகிறார். ஏனெனில் மத்திய அரசுக்கு இது அக்கினிப் பரீட்சை. இவ் வாக்கெடுப்பு தோற்றுப்போனால் வடக்குகிழக்கு இணைப்பு நிரந்தரமாகும். இதனால் மத்திய அரசு ஆட்டம்காண ஏன் சிலவேளை ஆட்சி கவிழும் வழியுண்டு. இச்சந்தர்ப்பத்தை இனவாதக் கட்சிகள் பெரிதுபடுத்தி ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிக்கலாம். வடக்குகிழக்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியிலான தமிழ் முஸ்லீம் கட்சிகள் வடக்கு கிழக்கு இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதை எதிர்க்கின்றன. ஆனால் மாகாண சபைத் தேர்தல் நடந்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஏனைய இனவாதக் கட்சிகளும் போட்டியிட வாய்ப்புண்டு. UNP, SLFP, மற்றும் இனவாதக் கட்சிகளுக்கு கிடைக்கக் கூடிய வாய்ப்புகளைக்கொண்டு சர்வஜனவாக்கெடுப்பை நடத்தலாமா வேண்டாமா என்னும் தீர்மானத்தை பிரேமதாஸா எடுக்க விடுதலைப் புலிகள் ஒருவாய்ப்பை ஏற்படுத்துகின்றனர்.

புதிய தேர்தலில் தென்னிலங்கை இனவாதக் கட்சிகள் போட்டியிட்டு தமிழ் பேசும் மக்களின் மூலம் கிடைக்கும் ஆசனங்களைப் பிரிப்பதன்மூலம் எதிர்க்கட்சிகள் பலமாக விளங்குவது, இதனால் மாகாண அரசு எந்தச் சட்டமூலத்தையும் நிறைவேற்ற முடியாமல் செய்வதன்மூலம் பொம்மைஅரசாக வாசிகசாலைக் கூட்டங்களைப்போல் வெறும் அறிக்கை வாசிக்கும் கூட்டங்களை நடாத்துவது அல்லது எதிர்க் கட்சிகள் பலத்தைக் காட்டி அதிகாரங்கள், உரிமைகள் பற்றி ஆட்சியிலிருப்பவர்களை வாய்திறக்காமலிருக்கப்பண்ணுவது. ஏனைய இயக்கங்களை, கட்சிகளை புலிகளின் மறைமுகமான ஆயுதமிரட்டல்களைக்கொடுத்து தேர்தலில் பங்குபற்றச் செய்யாமல் விடுவதன்மூலம் விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்துவது ஏனைய இயக்கங்கள் நாளாவட்டத்தில் இயங்கமுடியாமல் போவது. விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து பாதுகாப்புக்களை மேற்கொள்கிறோம் என்று கூறிக்கொண்டு அவர்களின் கேந்திர நிலையங்களை அறிந்துகொண்டு தனிமையில் இருக்கும் விடுதலைப் புலிகள்மீது வடமராட்சி தாக்குதல் போன்ற ஒன்றை ஏற்படுத்தி அடியோடு அழிப்பது. ஆகிய இலாபங்களை கணக்குப்போட்டோ அல்லது கற்பனை செய்தோ இலங்கை அரசு தேர்தலை நடத்த முன்வந்துள்ளது.

இக்காலகட்டத்தில் புலிகள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் எப்படியானஅரசியல், ஆயுத தந்திரோபாயங்களை பிரயோகிக்கிறார்கள் என்பது பற்றியும், இத இதனால் தமிழ் பேசும் மக்களுக்கு என்ன இலாபம்நட்டங்கள் என்பதையும் பார்ப்போம்.

எந்த ஒரு தீர்வுமற்ற நிலையில் ஆயுத மிரட்டல்கள் மூலம் தமிழ் பேசும் மக்களை அரசியல் அனாதைகளாக்கியதில் LTTE யினர் பெரும் பங்கு வகித்துள்ளனர். என்பதில் இரண்டு கருத்

www.padippakam.com

துக்கள் இருக்கமுடியாது. இயக்கங்கள் மீதான தன்னாதிக்க ஆளுமையை செலுத்தி ஏனைய இயக்கங்களை பலவீனப்படுத்தி பொது எதிரியைப் பலப்படுத்தி வடமராட்சி தாக்குதலின்போது தனித்து நின்று மக்களைக் காப்பாற்ற முடியாது மக்களுடன் சேர்ந்து ஓடி ஒளிந்த பெருமைக்குரியவர்கள். இவர்கள் ஏற்படுத்திய இத்தேக்கநிலை போராட்டத்தை ஒரு இக்கட்டான நிலைக்குமேலே நகரமுடியாத அளவுக்கு பலவீனமடைந்த நிலையை ஏற்படுத்தியது என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்பலவீனச்சந்தர்ப்பத்தைப் பாவித்து இயக்கங்களின் கருத்துக்களைக்கூட அறியாத இலங்கை, இந்திய அரசுகள் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தினர். இவ் ஒப்பந்தம்பற்றி தெளிவுபடுத்த பிரபாகரன் டெல்லிக்கு அழைக்கப்பட்டபோது ஏனைய இயக்கங்களுடன் பேசக்கூடாது என முரண்டுபிடித்தமையும் இந்திய அரசு நிராகரித்தமையும் LTTE யினரின் ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டு. தமது இயக்க இளைஞர்களின் புனர்வாழ்வுக்கு இந்திய அரசு மாதா மாதம் 50இலட்சம் தரவேண்டும் என ராஜீவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு தாயகம் திரும்பிய பிரபாகரன் முதல் மாதப் பணத்தைப் பெற்றுக்கொண்டார். தமிழீழத்திற்கு திரும்பியதும் இடைக்கால நிர்வாக சபையில் தமக்கு முழு இடமும் தரப்படவேண்டும் ஏனைய இயக்கங்களுக்கு கொடுக்கக்கூடாது என்று முரண்டு பிடித்ததின் விளைவு இந்திய இராணுவத்துடன் மோதல் நிலைமைகளைக் குழப்பி அடித்தனர் LTTE யினர். ஒப்பந்தத்தின்படி மாகாண சபைத் தேர்தல் நடாத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது தாம் இல்லாத தலைமை ஒன்று தமிழ் பேசும் மக்களுக்கு கிடைக்கக்கூடாது என எண்ணி தேர்தலில் போட்டியிடுபவர்கள் துரோகிகள் என்றும் மாகாண சபை ஒரு பம்மாத்து என்றும் கூறி மக்களை வாக்களிக்கவிடாது அமைதி சூழ்நிலை ஏற்படவிடாது மிரட்டினர். தாமாகவே இந்திய இராணுவத்துடன் மோதல் நிலைமைகளை சிக்கலாக்கிவிட்டு தேர்தலில் போட்டியிடுபவர்களை இந்தியாவின் கைக்கூலிகள் என்று பட்டம்சூட்டி கௌரவித்தனர். இந்திய எதிர்ப்புவாதிகள் இச்சந்தர்ப்பத்தை தமது அரசியல் மேடைக்கு நல்ல நாடகமாக பயன்படுத்தி தேர்தலில் போட்டியிட்டவர்கள் இந்தியக் கைக்கூலிகள் என்னும் தலையங்கத்தை உயரத்தூக்கிப் பிடித்தனர். இது புலிகளுக்கு நல்லவாய்ப்பை ஏற்படுத்தியது எனலாம். ஆனால் 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 6ம் திகதி (அதாவது இயக்கங்கள் யாவும் ஈழப்போராட்டத்தை ஆயுதரீதியில் மும்மரமாக முன்னெடுத்த வேளை) பெங்களூரில் ராஜீவின் முயற்சியினால் ஜே.ஆரை பிரபாகரன் சந்திக்க சென்றுவிட்டு அறிக்கைவிட்டபோது தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டால் மாகாண சபையைத் தாம் ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார். இதன்மூலம் இந்தியாவின் அனுசரணையுடன் முதன் முதலில் மாகாண சபையை ஏற்றுக்கொண்டவர்கள் LTTE யினர் என்பது தெளிவாகிறது. தமக்குப் பதவி கிட்டவில்லை என்பதற்காக இந்திய இராணுவத்தை

எதிரியாக்கியதோடு மக்கள் மத்தியில் நின்று இராணுவத்தை எதிர்த்ததால் இந்திய இராணுவம் இவர்களைத் தாக்கவேண்டி பொது மக்களையும் கொலை செய்தது. வீடுகளைத் தமது அரண்களாகப் பாவித்து LTTE யினர் இந்திய இராணுவத்தைத் தாக்கினர். ஆத்திரமடைந்த இராணுவம் இவர்களை அழிக்கிறோம் என்று சொல்லி வீடுகளை நிர்மூலமாக்கியது. இப்படியாக ஆரம்பித்த மோதல்கள் கட்டுக்கடங்காதுபோய் பெரும் அழிவுகளில் முடிந்தது மட்டுமல்லாது இந்தியா எங்களைக் காப்பாற்று என்று ஏங்கிய மக்களை இந்திய இராணுவமே வெளியேறு என்று வெறுப்போடு சொல்லுமளவிற்கு இந்திய இராணுவத்தை சீண்டிவிட்டு தமிழ் பேசும் மக்களின் எதிரியாக்கிய பெரும் அரசியல் சாணக்கியத்தைப் புரிந்தவர்கள் LTTE யினர். அத்தோடு மட்டுமல்லாது வடமராட்சி தாக்குதலில் வெறும் ஒரு சில ஆயிரம் இலங்கை இராணுவத்தை எதிர்க்க முடியாமல் ஓடியவர்கள் மக்களைப் பயமுறுத்தி அரணாக அமைத்து இந்திய இராணுவத்தை தாக்கியதால் அவர்கள் புலிகளை அழிக்க மக்களையும் கொல்லவேண்டியுள்ளதே என்று பின்வாங்கியதை தமக்கு சாதகமாக்கிக்கொண்டு உலகின் நாலாவது பெரிய இராணுவத்தை எதிர்த்துப் போராடுகிறோம் என்று மார்தட்டிக்கொண்டனர்.

இந்திய இராணுவத்தின் தொடர் தாக்குதல்களினாலும் மனோவியல் ரீதியில் பலவீனமடைந்த போராளிகள் வெளிநாடுகளுக்கு வெளியேறியமையினாலும், உட்கட்சி முரண்பாடுகளினாலும் இயங்க முடியாத அளவிற்கு பலவீனமடைந்திருந்த LTTE யினர் தமது அரசியல் எதிரியாகக் கருதும் EPRLF ஐ அழிப்பதற்கும் இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்கும் இலங்கை அரசிடம் ஆயுதங்களைப் பெற்று தம்மைப் பலப்படுத்துவதோடு வடக்கு கிழக்கின் ஆட்சி அதிகாரத்தைப் பெற்று தம்மை மறுசீரமைத்துக்கொள்ளவும் வேண்டி இலங்கை அரசுடன் நிபந்தனையின்றி சரணடைந்து கொண்டனர். ஆயுதங்களுடன் கூடிய புதிய ஜனநாயகத்தை அறிமுகப்படுத்தியுள்ள LTTE யினர், இன்று மாகாண சபை கலைக்கப்படவேண்டும் புதிய தேர்தல் நடத்தப்படவேண்டுமென்று கோருகின்றனர். இந்நிலையை இவர்கள் எப்படிப் பாவிப்பார்கள் என்று பார்ப்போமாயின் இரண்டு அல்லது மூன்று வழிகளைக் கையாள இடமுண்டு.

மாகாண சபையைக் கலைப்பதன்மூலம் EPRLF ஐ செயலிழக்க செய்வது. பின்பு இடைக்கால நிர்வாகத்தைக் கோருவது அதற்காக சில குழப்பல் வேலைகளை ஆரம்பித்து இப்போது தேர்தல் நடாத்த சமயம் சரியில்லை ஆகவே இடைக்கால நிர்வாகத்தைத் தாருங்கள் என்று பெற்றுக்கொண்டு ஆயுததாரிப்பாரை தொடர்வது. அது முடியாமல் போகும் பட்சத்தில் இலங்கை இராணுவத்துடன் மோதல் நிலைமைகளைக் குழப்பிவிட்டு மீண்டும் தமிழீழ தாகத்தை உயர்த்திப் பிடிப்பது. அல்லது தேர்தலை நடக்கவிட்டு ஏனைய இயக்கங்களை பங்குபற்ற விடாத

www.padippakam.com

ஜனநாயகப்போக்கை கடைப்பிடித்து தாம்மட்டும் போட்டியிட்டு ஏகமனதாக தெரிவுசெய்யப்படுவது. இதில் கிழக்கில் சில பிரச்சனைகளை தென்னிலங்கை கட்சிகள் மூலம் முகம் கொடுக்கவேண்டிவரும். அந்த ஜனநாயகம் தொடர்ந்தால் தாம் தேர்தலில் பங்கு பற்றப்போவதில்லை என ஏற்கனவே இயக்கங்கள் அறிவித்துள்ளமையால் இயக்கங்களை தேர்தலில் பங்குபற்ற விடாமல் தடுக்கவேண்டிய தேவை LTTE யினருக்கு ஏற்படாது. இப்படியாக தேர்தல் நடந்து ஆட்சியைப் பிடித்தால் இப்போது EPRLF இனர் ஈழப்பிரகடனம் செய்யப்போவதாய் அறிவித்துள்ளமையால் தாம் முந்திக்கொண்டு உடனே ஈழப்பிரகடனத்தை செய்து உடனே இந்தியாவின் காலில் விழும் இலங்கையை எதிர்க்கவும் கூடும்.

இலங்கை இராணுவம் மோதினால் எதிர்த்துத் தாக்குவோம் என்கிறார்கள். 87ல் பலவுடன் இருந்தபோது வடமராட்சியில் ஓடியவர்கள் இன்று இந்திய இராணுவத்துடன் மோதலில் ஈடுபட்டதின் விளைவாக எத்தனையோ பயிற்சிபெற்ற திறமையான போராளிகளை இழந்துவிட்டு வெறும் யால்குடிகளை போராளிகள் என்ற சொல்லுக்குள் போர்த்து வைத்துக்கொண்டு நாம் பலமாக இருக்கிறோம் என்று அறிக்கைகள் விடும் பலவீனமான அமைப்புதான் LTTE. ஆனால் இலங்கை அரசோ தன்னை எத்தனையோ மடங்கு பலப்படுத்தியதோடு இவர்களை எப்படி அழிக்கலாம் என்பதையும் தெரிந்து வைத்திருக்கிறது. ஆக இதில் வெற்றி தோல்வி யாருக்கு என்பது வெளிச்சம்.

தங்கள் பதவிகளைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்களே தவிர மாகாண அரசுக்கான அதிகாரங்களைப்பற்றி கதைகளைக்காணோம். தமிழ் பேசும் மக்களுக்கு தலைமையேற்கப்போகும் இவர்கள் எந்தவித புதிய யோசனைகளையும், திட்டங்களையும் தமிழ் பேசும் மக்களின் நன்மை கருதி முன்வைப்பதாகத் தெரியவில்லை. இரண்டு வருடங்களாக அதிகாரங்களற்றிருக்கும் மாகாண சபையை தங்கள் வசப்படுத்துவது மட்டும்தான் இவர்களின் இன்றைய அரசியல் தந்திரோபாயம் என்பது புலனாகிறது.

இப்பிரச்சனையை வேறு கோணத்தில் நகர்த்திக்கொண்டிருக்கும் EPRLF இனர் என்ன செய்துள்ளார்கள் செய்கிறார்கள் என்பதை பார்ப்போம்.

ஆரம்ப காலத்திலிருந்தே இயக்கங்களிடையே ஐக்கியத்தின் அவசியத்தை உணர்ந்து அதற்காக தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியவர்கள். ஐக்கியம் என்பது எல்லா வகையிலும் பூரணமானதாய் இருக்கவேண்டும், புரிந்துணர்வின் அடிப்படையில் ஏற்பட வேண்டும் என்று சாட்டுக்கள் சொல்லிக்

www.padippakam.com

கொண்டு தட்டிக்கழித்தவர்கள் மத்தியில் குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் கீழாவது ஒன்றிணைவோம் என ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய அமைப்புக்களில் முழு ஒத்துழைப்பையும் வழங்கி ஐக்கியத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்பதை நடைமுறையில் நிரூபித்தவர்கள்.

86ல் TELO இயக்கத் தலைவர் சிறிசபாரத்தினமும் TELO போராளிகளும் LTTE யினரால் படுகொலை செய்யப்பட்டபோது பொது மக்கள் மாத்திரமல்ல ஆயுதம் தாங்கிய போராளிகளே வீதிக்கு வந்து இந்த அநியாயத்தை எதிர்த்து குரல் கொடுக்கப் பயந்து ஓடி ஒளிந்துகொண்டபோது குறிப்பிடக்கூடிய அளவு மக்களை அணிதிரட்டி தெருவில் இறங்கி LTTE யினரின் அராஜகத்தை கண்டித்து சவப்பெட்டி ஊர்வலம் நடாத்தியவர்கள்.

வெறும் பொழுது போக்குக்கு மார்க்சிசம் அப்படி இருக்கவேண்டும் இப்படி இருக்கவேண்டும் என்று கூறுபவர்களும் முற்போக்கு சக்திகளின் நல்லவற்றை வரவேற்காது குறைகளை மட்டும் பெரிது படுத்திக்கொண் தாமே மார்க்சிச மேதாவிகள், சமூக விஞ்ஞானிகள் என்று மார்தட்டுவோர் மத்தியில் உழுத்துப்போயிருக்கும் பத்தாம் பசலிச சமூகத்தை அழித்து புதிய சமுதாயத்தை உருவாக்குவோம் என்று தெளிவுடன் முன்வந்து அரசியல் திட்டம் ஒன்றை வகுத்து வர்க்கக்கண்ணோட்டத்தில் மக்களை ஸ்தாபனமயப்படுத்தும் முயற்சிகளில் தம்மால் முடிந்தவரை திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர்கள். சாதிக்குள் அமிழ்ந்துபோயிருக்கும் தமிழ் சமூகம் இவர்கள் கொண்டுள்ள வர்க்கக்கண்ணோட்டத்தால் இவர்களை எட்டிநின்றே பார்க்கிறது. இதைவிடுத்து சமூகம் போகும் பாதையிலேயே ஏனைய இயக்கங்கள் கட்சிகள் போவது போல் இவர்களும் நடந்திருப்பின் இவர்கள் இன்று அரசியலில் உச்சாணியில் இருந்திருக்க முடியும். ஆனால் பதவிக்காகவும் சந்தர்ப்பவாதத்திற்கும் கட்சிக் கொள்கையை விற்காமல் உறுதியுடன் செயல்ப்படுபவர்கள். இவர்கள் ஒரு முழுமையான முற்போக்கு சக்திகளா இல்லை என்று வாதாடுபவர்களும் உண்டு இவர்கள் முழுமையானவர்களா என்பதை ஆராய்வதை விடுத்து தம்மையெல்லாம் முற்போக்கு சக்திகள் என்று முத்திரை குத்திக்கொண்டு பிற்போக்குத்தனமாக நடப்பவர்கள் மத்தியில் இவர்கள் சுமாராகப் பரவாயில்லை என்றே படுகிறது. தம்மை செழுமைப்படுத்திக்கொள்ளும்போது முழுமையடைய வழியுண்டு.

86ம் ஆண்டில் LTTE இனர் இவர்கள்மீது தாக்குதல் தொடுத்தபோது அநியாய அழிவுகளையும் பொது எதிரியை பலப்படுத்தக்கூடாது என்பதையும் கருத்திற் கொண்டு தாமாகவே பின் வாங்கிக்கொண்டவர்கள். இதைப் பயம் என்றும் LTTE யினரை யாராலும் அடிக்கமுடியாது என்று கோழிச்சண்டை பார்க்கும் பாணியில் வாதிடுபவர்களும் உண்டு.



படிப்பகம்

www.padippakam.com

இலங்கை—இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபோது இதை ஒரு இடைக்காலத் தீர்வாக ஏற்றுக்கொள்கிறோம். இலங்கை அரசு உரிமைகளை கொடுக்கும் என்று நம்பிக்கையில்லை, இந்தியா பொறுப்பெடுத்தாலும் இலங்கை இராணுவத்தின், LTTEயினரின் அராஜகபாசிச நடவடிக்கைகளினால் அல்லல்களுக்குள் அகப்பட்டிருக்கும் மக்களுக்கு சகஜ நிலையை உண்டுபண்ணவும் இழந்துபோயிருக்கும் ஜனநாயகச் சூழலை ஏற்படுத்தவும் இச்சந்தர்ப்பத்தைத் பயன்படுத்துவோம் என்று தமது நிலையை தெ படுத்தியவர்கள்.

மாகாண அரசு தேர்தல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது LTTE இனரை எதிர்த்து நின்றால் இரத்தக்களரி ஏற்படும் என்றனர் ஒரு பகுதியினர். அமைதிக்குப்பின் தேர்தலா தேர்தலுக்குப்பின் அமைதியா என ஆரவாரங்கு நடத்தினர். இவ்வேளையில் அச்சமுடன் முன்வந்து மாகாண அரசை தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் படிக்கற்களாக பயன்படுத்துவோம் என்று தேர்தலில் பங்கேற்றவர்கள். இதனால் இவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளும் இழிசொற்களும் கணக்கிலடங்கா. ஆயினும் நாதியற்றிருந்த மக்களுக்கு ஒரு அரசியல் வடிவத்தை ஏற்படுத்தி மத்திய அரசு பூச்சாண்டி காட்டிய மாகாண அரசை செயல் வடிவம் பெறச்செய்து அதையே இன்று மற்றவர்கள் தினமும் பேசும் அளவுக்கு, தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வை அரசியல் சூழ்நிலை மாற்றங்களுக்கேற்ப முன்வைக்கக்கூடியவர்கள் தலைமையேற்க தகுதியுள்ளவர்கள் என்று நிரூபித்தவர்கள்.

இவர்களின் சிவில்நிர்வாக நடைமுறையை குழப்பி அடுத்த LTTE இனருக்கு முகம் கொடுப்பதற்காயும் EPRLF இனரின் குடும்பங்களையும் ஆதரவாளர்களையும் LTTE இனர் கொலை செய்தபோது அதை நிறுத்த LTTE யினரின் ஆதரவாளர்களையும் குடும்பங்களையும் பதிலுக்கு படுகொலை செய்து LTTE இனரின் படுகொலைகளைக் குறைத்தமை என்று கூறப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

தொண்டர்படை, தேசிய இராணுவம் போன்றவற்றிற்கு ஆட்களைத் திரட்டியபோது LTTE இனரால் படுகொலை செய்யப்பட்ட, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் இளைஞர்கள் கூடுதலாக இணைந்து கொண்டனர். இவர்களிடம் அரசியல் நோக்கைவிட பழிவாங்கும் முயற்சியே விஞ்சி நின்றதால் இவர்கள் பல பழிவாங்கல்களை மேற்கொண்டனர். இதை இவர்கள் கட்டுப்படுத்த காலதாமதமானது தவறானதாகும்.

இவர்களுடன் இணைந்து செயற்பட்ட இயக்கங்கள் விட்ட பிழைகளை பேசித்தீர்ப்போம் என்னும் நோக்கில் நடந்துகொண்டமை இவர்களுக்கே பழிச்சொற்களை சேர்த்து கொடுத்தது. இவர்களின் அடிமட்டங்களில் உள்ள உறுப்பினர்கள் பொது மக்கு



படிப்பகம்

www.padippakam.com

டன் தவறான அணுகுமுறைகளை மேற்கொண்டதானது ஸ்தாபனரீதியாக மேற்கொண்ட முயற்சிகளை முறியடித்தது எனலாம். ஏனைய இயக்கங்களுடன் இணைந்து தேசிய சபையை உருவாக்கியபோதும் தன்னாதிக்கத்தலைமையில் தேசிய சபையைக் கலைக்காது புரிந்துணர்வின் அடிப்படையில் வெளியேறியது வரவேற்கக்கூடியதாகும்.

இலங்கை அரசு ஒரு கணக்குப்போட்டு LTTE யினரைக் கொண்டு EPRLF இனரை அழிக்க ஆயுதங்களை வாரிவழங்கியபோது மீண்டும் இரத்தக்களரி ஏற்படப் போகிறது என பொது மக்கள் விழி பிதுங்கினர். இலங்கை அரசைவிட ஜனநாயகத்தில் குறைந்தவர்கள் அல்ல என்பதுபோல் ஆயுதங்களைத் தவிர்த்து மீண்டும் பின்வாங்கியுள்ளதன் மூலம் தம்மை நம்பியமக்களையும், கட்சி உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் காப்பாற்றியுள்ளார்கள். LTTE யினரின் பாணியில் EPRLF நடந்து கொண்டிருப்பின் வெறும் மண்டை ஓடுகள்தான் வடக்கு கிழக்கில் மிஞ்சியிருக்கும்.

மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகளாக இல்லாது மாகாண அரசுக்கு அதிகாரங்களைப் பெறுவதில் ஜனநாயகரீதியில் ஒருமையாகப் போராடியதோடு இலங்கை அரசிடம் விலைபோகாது கைக்கூலிகளாக மாறாது எதிர்ப்புகளைச் சம்பாதித்து விரோதித்துக் கொண்டபோதும் உறுதியுடன் செயற்பட்ட பெருமை இவர்களுக்கு உண்டு.

மாகாண அரசின் செயலகத்தை திருகோணமலையில் ஏற்படுத்தியதன் மூலம் பறிபோக இருந்த திருமலையைக் காப்பாற்றியவர்கள். இலங்கை அரசு தமிழர்களுக்கு எந்த உரிமையையும் வழங்காது ஈழம் தான் தமிழ் பேசும் மக்களுக்கான இறுதித் தீர்வு என்பதை மாகாண அரசை ஏற்படுத்தியதன் மூலம் உலகிற்கு மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளதோடு ஆயுதப்போராட்டம் நமது விருப்பமல்ல வேறுவழியில்லை என்னும் நிலையில்தான் ஆயுதமேந்திப் போராடுகிறோம் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

எந்த அதிகாரங்களையும் மாகாண அரசுக்கு வழங்காது மத்திய அரசு தமது நண்பர்களுக்கு பதவிமாற்றம் செய்யவேண்டி மாகாண அரசைக் கலைக்க முயற்சிகளை மேற்கொண்டபோது அரசியல் அநாதைகளாக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு வெறுமையான மாகாண அரசு தானா அரசியல் தீர்வு என மக்கள் அங்கலாய்த்தனர். இவ்வேளையில் எந்த ஒரு கட்சியும் ஒரு தீர்வையும் முன்வைக்காமல் மௌனம் சாதித்தது. LTTE இனரோ தற்போதைய பிரச்சனை EPRLF ஐ விரட்டுவது தான் கதிரையைப் பிடிப்பது என்னும் பாணியில் மாகாண அரசு என்னும் மந்திரத்தை உரக்க உச்சரித்தது. இலங்கை அரசும், தமிழக முதல்வர் கருணாநிதியும் இயக்கங்களின் ஒற்றுமைதான் தமிழ் மக்களின் பிரச்சனை என்னும் பாணியில் ஒற்றுமைக்கு முயற்சிகள் மேற் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

றோம் என்று பூடா விட்டுக்கொண்டிருந்தனர். இவ் வேளையில் EPRLFஇனர் ஒருவருடம் மாகாண அரசுக்குள்ளிருந்து தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் போராடினோம் அரசு செவிசாய்ப்பதாக இல்லை. ஆகவே மாகாண அரசை தேசிய ஈழப்பேரவையாக பிரகடனப்படுத்துகிறோம். இதன் மூலம் 19அம்சக் கோரிக்கைகளை முன்வைக்கிறோம். இக்கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற ஒருவருட அவகாசமும் கொடுக்கிறோம். இந்தியா இதற்கு பொறுப்பேற்கவேண்டும் என்று மீண்டும் ஒரு அரசியல் தீர்வை முன்வைத்துள்ளார்கள். இவர்கள் நினைத்திருந்தால் அதிகாரங்கள் பற்றி மூச்சுக்காட்டாது மௌனம் சாதித்திருந்துகொண்டு பிரேமதாசாவுடன் கைகுலுக்கி இருப்பின் மாகாண அரச கதிரைகளை தக்கவைத்துக்கொண்டு காலத்தை ஓட்டியிருக்க முடியும். அதைச் செய்யாததன் மூலம் சந்தர்ப்பவாதிகளோ மக்களை விலைக்கு விற்பவர்கள் அல்ல என்பதை நிரூபித்திருக்கிறார்கள். இந்திய அரசின் கைக்கூலிகள் ஆகவே இந்திய இராணுவம் வெளியேறியவுடன் ஓடிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டும் உண்டு. இந்தியாவின் கைக்கூலிகளாக இருந்தால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றாப்போல இலங்கை அரசின் கைக்கூலிகளாக மாறி கதிரைகளை தக்கவைத்துக்கொள்ளலாம் தானே ஏன் அப்படிச் செய்யவில்லை என்ற கேள்வி இங்கே எழுகிறது.

இலங்கை அரசு இவர்களைக் கண்டு பயப்படுவதற்கு காரணமே இவர்கள் கொண்டுள்ள வர்க்க நிலைப்பாட்டில் உள்ள உறுதி. ஆகவே இவர்களுடன் கைகுலுக்க முன்வராது. அப்படியானால் LTTE இனருடன் கைகுலுக்க முடிகிறது என்றால் ஒரே குணாம்சத்தைக் கொண்டவர்கள் என்பது தெளிவாகிறது.

இவர்களின் 19அம்சக் கோரிக்கையை திசை திருப்பி ஈழப்பிரகடனம் என்ற பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதில் தென்னிலங்கை அரசியல்வாதிகளைவிட எங்கள் தமிழ் கட்சிகளின் கொந்தளிப்புகள் தான் அதிகமாகவுள்ளது. யார் குற்றியும் அரிசியாகட்டும் என்று யோசித்துக்கொள்கிறார்கள். ஆனால் ஒருவரும் குற்றாமல் இருந்துவிட்டு யாராவது ஒருவர் குற்றமுன்வந்தால்; எட நாங்கள் குற்றுவது எப்படி என்று முழிக்கிறோம் இவர்கள் குற்றி அரிசியை எடுக்கப் போகிறார்கள் என்ற ஆதங்கத்தில் இவர்கள் குற்றுவது சரியில்லை என்போரும் நாங்கள் குத்தினால்தான் அரிசி இவர்கள் குற்றினால் கல்லு என்போருமாக மாரடிப்பவர்களைப் பார்க்கும்போது வேதனைப்படாமல் இருக்கமுடியவில்லை.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்புடனும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழவே 19அம்ச கோரிக்கைகள். இவற்றை நிறைவேற்றவே

www.padippakam.com

இலங்கை அரசுக்கு ஒருவருட அவகாசம். ஒருவருடத்திற்குள் இலங்கை அரசு இக்கோரிக்கைகளுக்கு இணங்காவிட்டால்தான் ஈழப்பிரகடனம்." இதை நம்மவர்களே மறைத்து திரித்துப் பேசுவதிலிருந்து தமிழ் பேசும் மக்களின் விடுதலையில், பாதுகாப்பில் ஒவ்வொருவரின் அக்கறையின் அளவு எவ்வளவு. தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையைப் பாவித்து கதிரைகளைப் பிடிக்கும் உழுத்துப்போன அரசியல் பாதையில் எவ்வளவு அக்கறை என்பது தெளிவாகிறது.

இன்று முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வு இன்று கேலிக்கூத்தாக்கப் பட்டாலும் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் எதிர்காலத்தில் இதுவே நடைமுறையாகும். இவர்கள் ஏற்படுத்திய அரசியல்வடிவமான மாகாண அரசுதான் இன்றைய நடைமுறை. இதைவெறும் கேலிக்கூத்து பம்மாத்து என்று கூறுபவர்கள் தமிழ் பேசும் மக்களுக்கு வைக்கும் அரசியல் தீர்வு என்ன? மாகாண அரசா? அதுவும் இவர்கள் ஏற்படுத்தியது தானே. ஆக தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வை அரசியல் சூழ்நிலைகளுக்கேற்ப முன்வைக்கும் திறன் படைத்த இவர்களே தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் தலைமை தாங்க தகுதியுள்ளவர்கள்.

LTTE இனரை தேர்தலில் பங்கேற்பதற்கு 6வது திருத்தச்சட்டம் நீக்கப்படவேண்டுமென்கிறார்கள். 6வது திருத்தச்சட்டம் பிரிவினை கோரக்கூடாது என்பது பற்றியது. அது நீக்கப்பட்டு LTTE இனர் தேர்தலில் பங்கேற்றால் தமிழீழக் கோரிக்கையை கைவிடுகிறார்கள் என்றாகிவிடும். அதேவேளை EPRLF இனர் முன்வைத்த தேசிய ஈழப்பேரவை பிரகடனம் சட்டப்படி செல்லுபடியாகும். LTTE யினரிடம் உள்ள ஒன்று தமிழீழம்தான் அதையும் விட்டுவிட்டால் அவர்களிடம் ஒன்றுமேயில்லை என்கிறார் முஸ்லீம் காங்கிரஸ் அஷ்ரப். 6வது திருத்தச்சட்டம் நீக்கப்பட்டால் தேசிய ஈழப்பேரவை பிரகடனத்திற்கு எதிராக மத்திய அரசால் நடவடிக்கை எடுக்க முடியாது. இந்நிலையில் தேசிய ஈழப்பேரவை தொடர்பாக மௌனம் சாதித்தால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் இதைப்பெரிதுபடுத்தி மத்திய அரசை தர்மசங்கடத்தில் மாட்டுவர். ஆக EPRLF இனரின் இன்றைய அரசியல் தீர்வு UNP+LTTE கூட்டுமுன்னணியினருக்கு சிதம்பர சக்கரம்தான். இதுவே தமிழ் பேசும் மக்களின் இன்றைய அரசியல்நிலை. இவர்களைத் தவிர PLOT EROS TELO ENDLF ஆகிய கட்சிகளும் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தில், பிரச்சனைகளில் பங்கேற்றவர்கள். இவர்களை ஒதுக்கிவிட்டு பிரச்சனையைப் பார்க்கமுடியாது. PLOT இனர் ஆரம்ப காலத்திலிருந்தே சுவிஸ் கன்டோன் முறையே தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வாக



படிப்பகம்

அமையலாம் என்று கூறிவருகின்றனர். அத்துடன் ஈழப்பேரவைப் பிரகடனம் கண்டிக்கப்பட வேண்டியதல்ல என்று கூறியுள்ளனர். EROS இன் இன்றைய அரசியல் தீர்வு LTTE யினர் பலம் பொருந்தியவர்கள் மக்கள் ஆதரவைப் பெற்றவர்கள் இதைவிட ஈழமே இறுதித் தீர்வு என்று கூறுவதையே அரசியல் தீர்வு என்கின்றனர். TELO வினரைப் பொறுத்தவரை LTTE இன் ஜனநாயகப்பிரவேசம் உலக அதிசயம் EPRLF இன் ஈழப் பேரவை பிரகடனம் 90ம் ஆண்டில் சிறந்த நகைச்சுவை என்று கூறுவதைத்தவிர வேறெதுவும் அவர்களிடம் இருப்பதாக தெரியவில்லை. இவர்கள் எல்லோரின் மத்தியிலும் தான் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் சிக்கித்தவித்துக்கொண்டிருக்கிறது. அரசியல் தீர்வுகள் முன்வைக்கப்படும்போது குறைகள் கூறுவது மிகவும் சுலபம். குறைகளை மட்டும் கூறுவது ஆரோக்கியமான விமர்சனமுமாகாது. ஆனால் முன்வைக்கப்படும் அரசியல் தீர்வுகளை குறைகூறுபவர்கள் தாம் ஏதாவது மாற்றுத் தீர்வுகளை முன்வைக்க வேண்டும். அதைவிடுத்து தம்மாலான ஒரு தீர்வை யாராவது முன்வைத்தால் அவற்றை எப்போதுமே குறைகூறிக் கொண்டிருப்பவர்கள் தாமும் குழம்பி மக்களையும் குழப்புவார்கள். இவர்களினால் தமிழ் பேசும் மக்களுக்கு எதுவித பிரயோசனமும் இல்லை. இவர்களைப் போன்றவர்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இன்று பெருகி வருவது தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகள் சிக்கலாக்கப்படுவதற்கு முக்கிய காரணியாகும். இவர்களை மக்கள் இனங்கண்டு புறக்கணிக்க முன்வரவேண்டும்.

# பெண் விடுதலைக்கான அணி எது?

இந்த நூற்றாண்டின் உரிமைகளுக்கான போராட்டங்களில் பெண்விடுதலைக்கான போராட்டமும் மிகவும் முக்கியமான ஒன்று. பல நூற்றாண்டுகளாய் பிற்போக்குவாத பாரம்பரியங்களைக்கொண்ட அடித்தளத்தில் இருந்துகொண்டு எந்தவித ஆட்டத்தையும் காணாது தன்னைத்தானே பார்த்து மார்தட்டிக்கொள்ளும் தமிழ் சமுதாயத்தில் பெண்விடுதலைக்கான கருத்துக்களும் போராட்டங்களும் பாதைகளும் மிகவும் கடினமானதும் கரடுமுரடானதாகவுமேதான் தென்படுகின்றது. அந்தவகையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பெண்விடுதலைக்கான கருத்துக்களும் போராட்டங்களும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சமகால வளர்ச்சிப்போக்கு ஏற்படாவிட்டாலும் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு முன்பாகவே ஊன்றிவிட ஆரம்பித்துவிட்டது. அதிலும் குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைக்கான போராட்டமும் பெண்கள் மத்தியில் சற்று விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதென்றால் வியப்பேதுமில்லை. 80களில் இருந்து குறிப்பிடத்தக்க அளவு பெண்கள் விடுதலை அமைப்புக்களுடனும், போராட்டங்களுடனும் தம்மை இணைத்துக்கொண்

டபோது ஆரம்பத்தில் பலவகையான எதிர்ப்புக்களையும் அவமானங்களையும் தமிழ் சமுதாயம் ஏற்படுத்திக்கொண்டிருந்தது. இன்று இவ்வாறான சிந்தனையோட்டங்களுக்கு மறைமுகமாக முண்டுகொடுத்துக்கொண்டிருந் ஒரு சில விடுதலை இயக்கங்கள் 86களின் பின் தமது இயக்கத்திற்கு போராளிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும், வெறுமனே கருவிகளை ஏந்திப் போராடுவதற்காகவும் பெண்களை அணிதிரட்டினர். இதை எந்தவித சந்தேகங்களுக்கு இடமின்றி முழுமையாக நம்பும் வகையில் ஒரு விடுதலை இயக்கத்தின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் ஒரு அறிக்கையில் தமிழ்ப் பெண்கள் தமிழ் கலாச்சார பண்பாடுகளுக்கமைய முழங்காலுக்கு கீழ் நிற்கக்கூடியவகையில் உடைகளை அணியவேண்டும் என்று அறிவித்துள்ளார். இதிலிருந்து ஆங்கே பெண்களுக்கான தனித்துவத்தை இழந்த நிலையையும் பெண்களின் உரிமைகளுக்கான(?) போராட்டங்களையும் ஆண்களே தீர்மானிக்கின்றனர் என்ற பரிதாப நிலையை யாராலும் மறுக்கமுடியாது.

இந்நிலையில் பெண்விடுதலை என்றால் என்ன?, அது எப்படி இருக்க வேண்டும், அது எந்த வர்க்கமக்களின் தலைமையில் அணிதிரட்டப்படவேண்டும் போன்றவைகளை நாம் கருத்தியல் ரீதியாக நோக்கவேண்டுமானால் நாம் அனைவரும் ஜதார்த்த புலத்தை நோக்கி நகர வேண்டிய அவசியமும் தேவையும் உள்ளதென்பதை உணரவேண்டியுள்ளது. தமிழ் பேசும் மக்கள் மத்தியிலிருந்து உருவாகிய பெண்விடுதலைக்கான போராட்டங்கள், அமைப்பு வடிவங்கள் போன்றவற்றை முற்றுமுழுதாகவே இருட்டடிப்பு செய்துவிட்டு அல்லது அது பற்றிய வரலாறு தெரியாமலே ஆய்வை மேற்கொள்ளுவது ஒரு நாடகம் பார்க்கப்போய் நன்றாக நித்திரைகொண்டுவிட்டு நாடகத்தின் இறுதிக்காட்சியில் திடீரென விழித்து உசாராக அக்காட்சியைப் பார்த்துவிட்டு ஏனையோருடன் சேர்ந்து கைதட்டிவிட்டு எழும்பி வீடு சேரும் காட்சிக்கு ஒப்பாகும். ஆகவே பெண்விடுதலையின் நோக்கத்தையும் தாற்பரியத்தையும் உணராமல் வெறுமனே பெண்விடுதலைக்கான பாதையை கண்டறிய முடியாது. தமிழ் பேசும் மக்கள் மத்தியிலே ஆங்காங்கே பொழுது போக்குக்காக அமைக்கப்பட்ட மாதர் சங்கம் பெண்கள் சிலரிடையே அன்று காணப்பட்ட பெண்விடுதலை தொடர்பான நிலைப்பாடு அதாவது பெண்விடுதலை என்றால் அது ஆண்களுக்கெதிரான போராட்டம். ஆண்களிடமிருந்துதான் பெண்விடுதலையைப் பெறவேண்டும் என்ற குருட்டுத்தனமான பார்வையும், சிந்தனையும் இன்றைய பெண்விடுதலையாளர் சிலரிடையே தென்படுவது மிகவும் வேதனைக்குரியது. மறுபக்கத்தில் ஆண்களில் பெரும்பான்மையானோர் கருத்து முதல்வாத அடிப்படையில் பெண்விடுதலைக்கு எதிரானகருத்துக்களை கொண்டிருக்கின்றனர். தமிழ் சமுதாயத்தில் பெண்களை தெய்வமாக மதிக்கப்படுகின்றார்கள், பெண்ணிற்கு எங்கே ஒழுக்கமுறை இருக்கிற

து, இனி எதற்கு பெண்விடுதலை?, ஆண்களை அடக்கவா?, பெண் விடுதலை என்றால் அது ஆண்களுக்கு எதிரானது என்பது போன்ற பல விதமான கோணங்களில் கருத்துக்கள் வருகின்றன. கற்பனை புராண நாயகிகளான கண்ணகி, சீதை, சாவித்திரி போன்றவர்களில் யார் கற்பில் சிறந்தவள் என்பதை ஆராய்வதிலேயே இந்த விஞ்ஞான யுகத்தில் நேரத்தை வீணடித்துக்கொண்டிருக்கும் தமிழ் சமுதாயத்தில் பெண்விடுதலைக்கு துரோகமிழைப்பவர்கள் பெண்விடுதலையின் அவசியத்தை உணர முடியாத ஆண்களோ அல்லது பெண்களோ அல்ல. காலாகாலமாக பசளையோட்டு தண்ணீர் ஊற்றி வளர்க்கப்பட்டுள்ள பிற்போக்குவாத சம்பிரதாயங்களும், கலாச்சாரங்களும், மூடநம்பிக்கைகளும், அவைகளின் அடித்தளத்தில் எந்தவித சிறு ஆட்டத்தையேனும் ஏற்படுத்தவிடாது கண்ணும் கருத்துமாக செயல்பட்டுவரும் சொத்துடைமை வர்க்கமும் அதன் ஊதுகுழல்களான வெகுஜன தொடர்பு சாதன பிரச்சார, கலை இலக்கியமும் என்றால் அது மிகையாகாது.

பெண்விடுதலை என்பதை இரண்டு வகையாக பிரிக்கலாம். அக, புற விடுதலையாகும். வெறுமனே வாய்வீச்சுக்கள் மூலம் கிடைத்துவிடக்கூடியதல்ல. அக விடுதலையானது ஆண்களும் பெண்களும் சிந்தனைப்புரட்சி செய்வதன்மூலம் ஆணாதிக்க ஆண்மேலாதிக்க உணர்வுகளை இல்லாது ஒழிப்பதற்கு மனமாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். புற விடுதலையை வென்றெடுப்பதற்கு சமுதாயத்தில் இருக்கக்கூடிய பெண்களின் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான எல்லா வகையான காரணிகளையும் ஒழித்தல் வேண்டும்.

இவைகளை எல்லாம் முறியடித்து ஒரு முழுமையான பெண்விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஊசலாடும் குணாம்சத்தைக்கொண்ட மத்தியதர வர்க்கத்துக்குள்ளே இருக்கக்கூடிய பெண்விடுதலையாளர்களின் தலைமையில் அணிதிரள்வதன்மூலமோ அல்லது இதே அமைப்பு முறையை கட்டிக்காப்பதற்காக சாகச ஜாலங்களின் மூலம் அணிதிரட்ட முற்பட்டிருக்கும் குட்டி முதலாளித்துவ தலைமையின்மூலமோ பெண்விடுதலையைக்காணமுடியாது. ஒரு சமூகமாற்றத்திற்கான போராட்டத்தின் மூலமே சாத்தியமடைய முடியும். அதை சாதிப்பதற்கு ஒரே சக்திதான் உண்டு. அது உழைக்கும் மக்கள் அணி. உழைக்கும் வர்க்க பெண்களின் தலைமையில் பெண்விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுப்பதன்மூலமே விடுதலையைச்சாத்தியமாக்க முடியும். தொழில் ரீதியாகவும், பால் ரீதியாகவும் ஒடுக்கப்படும் உழைக்கும் வர்க்கப் பெண்களிற்கு எல்லாவகையான ஒடுக்குமுறைக்கும் பொது எதிரிகளாக சொத்துடைமை வர்க்கமே காணப்படுவதால் அவர்கள் அதற்கெதிராக போராடுவார்கள். ஆகவே உழைக்கும் வர்க்கப் பெண்களை பெண்விடுதலையாளர்கள் அணிதிரட்டி அவர்களின் தலைமையில் போராடுவதன் மூலமே பெண்விடுதலையை வென்றெடுக்கமுடியும்.

www.padippakam.com

# கலைஞரும் நாங்களும்



M.பிரகாசன்

இன்றைய தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் நீண்ட காலத்தொடர்புடையவர்..நமது போராட்டத்தையும், போராட்ட அமைப்புக்களையும் அவர் தனது அரசியல் நன்மைகளுக்காகப்பயன்படுத்தினாரா அல்லது நமது மக்களின் விடுதலைக்காய் இதயசுத்தியுடன் பணியாற்றினாரா என்பதை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. வெறுமனே இந்திய எதிர்ப்புவாதத்தை பேசிக்கொண்டு தமிழ் பேசும் மக்களை திசைதிருப்புவதை விடுத்து தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளைபெறுவதற்கு இலங்கை-தமிழ் பேசும் மக்கள்-இந்தியா என்ற சங்கிலித் தொடரிலிருந்து இந்தியாவை நழுவவோ வெளியேற்றவோ விடாது இழுத்துப் போட்டு நமது உரிமைகளை வென்றெடுப்பதே ஜதார்த்தத்தில் உண்மையானதாகும். தமிழ் நாட்டுமக்களுக்கும் எங்களுக்கும்உள்ள உறவு பிரிக்கமுடியாத ஒன்று. ஆகவே தமிழ் நாட்டின் முதலமைச்சர் கலைஞர் இன்றுவரை தனது பாதையில் இலங்கைத் தமிழர் பிரச்சனையை எப்படிக் கடந்து வந்துள்ளார் என்பதைப் பார்ப்போம்.

தமிழீழ விடுதலை இயக்கத்தை சேர்ந்த திரு குட்டிமணி தங்கத்துரை இலங்கையில் தேடப்பட்ட வேளையில் தமிழ் நாட்டுக்குத் தப்பியோடியிருந்தார்கள். இலங்கை அரசின் வேண்டுகோளுக்கிணங்க இவர்களைப் பிடித்து இலங்கை அரசிடம் ஒப்படைக்கும் கைங்காரியம் கலைஞருக்கு தோல்வியைக் கொடுத்தாலும் அவர்கள்

இலங்கை ஆயுதப்படைகளிடம் அகப்பட்டுக்கொண்டதே திருப்தியடைந்து கொண்ட இந்த மாண்புமிகு கலைஞர் பின்பு எம். ஜி. ஆர் ஆட்சிக்கு வந்தபோது கலைஞர் எதிர்கட்சியானார். இவ்வேளை குட்டிமணி தங்கத்துரை போன்றோரின் வழக்குகள் இலங்கையில் பிரபல்யப்படுத்தப்பட்டு பின்பு அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களின் குடும்பங்கள் தமிழ்நாட்டில் அகதிகளானபோது எம். ஜி. ஆர் அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி உதவிகளும் செய்தார். அப்போது தனது மடத்தனத்தை புரிந்துகொண்ட கலைஞர் அந்தக் குடும்பங்களை சென்று சந்தித்து ஆறுதல் கூறினார். பின்பு சிறீசபாரட்னத்தை நெருக்கமாக்கிக் கொண்டார். இவ்வேளையில் (EROS, TELO, EPRLF . இணைந்து ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தின. தனது அரசியலுக்கு இதைப்பயன்படுத்தி


படிப்பகம்

அவர்களுடன் படம் பிடித்துக் கொண்டு தாமே கூட்டமைப்பை உருவாக்கியதாய் தம்பட்டமடித்துக்கொண்டார். கருணாநிதி இவர்கள் மூவரையும் பிடித்துக்கொண்டதால் எம்.ஜி.ஆர் பிரபாகரனைப் பிடித்துக்கொண்டு வேண்டிய உதவிகளைச் செய்தார். கலைஞர் தனது பிறந்தநாள் ஒன்றுக்கு நிதி சேர்த்து எல்லா இயக்கங்களுக்கும் பிரித்துக் கொடுத்தார். பிரபாகரன் அப்பணத்தை வாங்க மறுத்துவிட்டார். கலைஞரிடம் பணம் வாங்காமல்விட்டால் எம்.ஜி.ஆர் மகிழ்ச்சி அடைந்து இரட்டிப்பாகத் தருவார் என்று கணக்குப்போட்டே பிரபாகரன் பணத்தை வாங்காமல் விட்டார்.

கலைஞருடன் நெருக்கமாயிருந்த சிறிசபாரட்னத்தை பயன்படுத்தி அன்றைய அரசியலை வீரவசனங்களுடன் கழித்துக் கொண்டிருந்தார். சிறிசபாரட்னம் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டபோது கலைஞர் கண்ணீர் வடித்தார். இலங்கை இராணுவக் கெடுபிடிகள் அதிகரிக்கும் போதெல்லாம் இலங்கையில் தமிழன் படுகொலை செய்யப்படுகிறான், தமிழ் பெண்ணின் கற்பு சூறையாடப்படுகிறது இந்திய இராணுவத்தை அனுப்பாது வேடிக்கை பார்க்கிறது என்று நீலிக்கண்ணீர் வடித்தார். எதிர்க்கட்சியில் இருந்ததால் மிகவும் இலகுவாக எதையும் பேசக்கூடிய வாய்ப்பு கலைஞருக்கு இருந்தது. TESO என்னும் அமைப்பை தொடங்கி இலங்கை தமிழருக்காக உயிர் கொடுக்கப்போவதாய் வீரமுழக்கமிட்டார். இந்திய அரசே படைகளை அனுப்பி இலங்கைத்தமிழரைக் காப்பாற்று இல்லையேல் தமிழகம் திரண்டெழும் என்று கர்ஜித்தார்.

இலங்கை—இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தில் கதிரைகள் முழுமையாகக் கிடைக்காமல் போனதால் இந்தியப் படைகளுடன் முரண்பட்டு அமைதிக்கு திரும்பியிருந்த சூழ்நிலையை குழப்பியடித்தார்கள். இது இந்திய அரசுக்கு பெரும் தர்மசங்கடமாகியது. மத்திய அரசு எம்.ஜி.ஆரை புலிகளை வழிக்கு கொண்டு வரும்படி நெருக்கியது. எம்.ஜி.ஆரோ மத்திய அரசை பகைத்துக்கொள்ள விரும்பவில்லை முடிவு எம்.ஜி.ஆர்—புலிகள் உறவு முறிந்தது. எவ்வளவோ உதவிகளைப் பெற்றுக் கொண்ட புலிகள் எம்.ஜி.ஆரை மூன்றாந்தர அரசியல்வாதி என்னும் கீழ்த்தனமான பட்டம் வழங்கி கௌரவித்தனர்.

இச்சூழ்நிலையைப் புரிந்துகொண்ட கலைஞர் இந்தியா படைகளை அனுப்பியது தப்பு உடனே வாபஸ் வாங்கு என்றார். தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர் மரணமும் கலைஞரின் படைகளை திருப்பியழை என்ற கூவலும் புலிகளுக்கு வரப்பிரசாதமாகியது. புலிகள்—கலைஞர் தொடர்பு வலுத்தது.

இன்று கலைஞர் தமிழ்நாட்டில் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கிறார். தமிழக ஆட்சியை கைப்பற்றியபோது 33%மான வாக்குகளைப் பெற்ற தி.மு.க பொதுத்தேர்தலில் 27%மான வாக்குகளைப் பெற்றதோடு ஒரு ஆசனத்தைக்கூட கைப்பற்ற முடியவில்லை. பாண்டிச்சேரியில் நடந்த தேர்தலில்

www.padippakam.com

அ.தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி ஒரு ஆசனத்தை கூடப்பெறாத கயிற்றில் நடக்கும் ஆட்சி தொடங்கியுள்ள அ.தி.மு.க இந்நிலையில் மத்தியில் கலைஞரின் சகாவான வி.பி.சிங்கின் ஆட்சியில் காஷ்மீர், பஞ்சாப் பிரச்சனை தலையிடியாயிருப்பதால் இலங்கைத் தமிழர் பிரச்சனையை கருணாநிதியிடம் ஒப்படைக்கின்றதாயும் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவ்வப்போது கருணாநிதி-தமிழ் குழுக்கள் சந்திப்புகள், பேச்சுவார்த்தைகள் பற்றி பிரதமருக்கு அறிவிப்பார் என்றும் செல்விட வி.பி.சிங் தற்காலிக தலையிடியிலிருந்து சிறிது விலக்கக்கொண்டார்.

தமிழ் நாட்டில் கலைஞர் பதவி விலகவேண்டும் என்ற குரல்கள் ஆங்காங்கே கேட்கத்தொடங்கியுள்ளன. இந்த சத்தம் மக்களிடம் போய்ச்சேர்ந்து வலுவடையாமல் தடுப்பதற்கு கலைஞருக்கு கிடைத்த ஒரு துருப்புதான் தமிழர் குழுக்களுடனான பேச்சுவார்த்தை. தமிழக மக்கள் கலைஞர் ஆட்சியை கலைக்க வேண்டும் என்று கூறுவதை திசை திருப்ப வடகிழக்கு மாகாண அரசு கலைக்கப்படவேண்டுமென்பதை சற்று உரத்தே கூறத்தொடங்கியுள்ளார். கலைஞர். தமிழர் குழுக்களை ஒற்றுமைப்படுத்துகிறேன் என்று தொடங்கிய கலைஞர் எல்லா இயக்கங்களையும் தனித்தனிய சந்தித்து அவர்கள் கூறுவதை ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டிருக்கிறார். ஆனால் இன்னமும் எல்லா இயக்கங்களையும் ஒரே மேசைக்கு அழைத்துப் பேசமுடியவில்லை. இது தவிர ஒற்றுமைக்கான எந்த முயற்சிகளையாவது மேற்கொண்டதாகவும் செய்திகள் இல்லை. ஆனால் மாகாண அரசு கலைப்பை மட்டும் உரத்துக் கூவுகிறார்.

கொழும்பிலும் இந்த வேடிக்கை நடக்கிறது அங்கேயும் பிரேமதாசா, கமீட், ரஞ்சன் விஜேரட்னமுத்தரப்பில் இயக்கங்களை ஐக்கியப்படுத்துகிறோம் என்கிறார்கள். எல்லாம் ஆடு நனையிதென்டு ஒநாய் அழுதகதைதான். அங்கேயும் மகாண சபை கலைக்கப்படவேண்டும் என்ற வசனம் தான் வெளியே கேட்கிறது.

இயக்கங்களின் ஒற்றுமைதான் தமிழர்களின் பிரச்சனை என்று இலங்கை அரசு காட்டுவதில் காரணமிருக்கிறது. மாகாண அதிகாரங்களை வழங்கவேண்டும் என்னும் விடயத்தை திசைதிருப்ப மாகாண அரசை கலைக்கவேண்டுமென்று இலங்கை அரசு கூவுவதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

கலைஞர் ஏன் மாகாண அரசைக் கலைக்கவேண்டுமென்கிறார். உண்மையிலேயே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவா அல்லது இலங்கை அரசுக்கும் கலைஞருக்கு வேண்டிய விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்யும் சாட்டில் தங்கள் தங்கள் லாபங்களை பெற்றுக்கொள்ளவா? மாகாண அரசைக் கலைக்க வேண்டுமென்று கூறும் கலைஞர் இதுவரையில் மாகாண அரசுக்கான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அதுவே இன்றைய தேவை என்பதை மத்

தொடர்ச்சி 28ம் பக்கம்

www.padippakam.com

# ஐக்கியப்படுவோம்

# போராடுவோம்

# அமைதி காண்போம்

படிப்பகம்